பதிவு எண் 2041. மகாத்மா காந்தி வாழ்க. தனிப்பிரதி விலை அணா ஒன்று





| | ரூ. அ. |
|---|---|
| வருட சந்தா ... ... ... | 3—0 |
| 6 மாத சந்தா ... ... ... | 1–12 |

[வாரப்பதிப்பு.]

ஆசிரியர்
ஈ. வெ. இராமசாமி நாயக்கர்.

| | ரூ. அ. |
|---|---|
| வெளி நாட்டிற்கு சந்தா ... | 4—0 |
| விளம்பரம் அங்குலம் 1-க்கு ... | 0—8 |

மாலை 2 | ஈரோடு, அக்ஷய-ஞு ஆடி-மீ 17-உ (1—8—26) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 14.



## உண்மையான கதர்

கெட்டியான கதர்!

கதர் வாங்குகிறவர்கள் விலையை கவனிப்பதுடன் சரக்கு அழுத்தத்தையும், நயத்தையும், கெட்டியையும் கவனிக்கவேண்டியது முக்கியமான கடமை. தமிழ் நாடு காங்கிரஸ் கதர் போர்டாரின் உதவியாலும் மேற்பார்வையாலும், அத்தாட்சி பத்திரத்துடன் நடைபெறுகின்றது கதர் போர்டாரின் விலைக்கே விற்கப்படும்.

(காங்கிரஸ் அத்தாட்சிப் பத்திரம்.

ஸ்ரீ காந்தி கதராலயத்தார் கை நூலால், கைத் தறியால் தயார் செய்யப்பட்ட உண்மையான கதர் உற்பத்தி செய்து நியாயமான விலைக்கு விற்கிறார்கள். எஸ். ராமநாதன்,
காங்கிரஸ் கதர் போர்டு காரியதரிசி.

விலாசம்:—ந. ராமசாமி. மானேஜர்,
ஸ்ரீ காந்தி கதராலயம், திருப்பூர்.

## கதர்! கதர்!! கதர்!!

தமிழ் நாடு கதர் போர்டாரால்
அத்தாக்ஷி பத்திரம் பெற்ற

## சுத்த கதர் ஜவுளிகள்.

வெள்ளை பீஸ்கள், வேஷ்டிகள், துண்டுகள், துவால்கள், சால்வைகள், அச்சு துண்டுகள், பலரகம் வெள்ளை கலர் கோட்டிங்குகள், சீட்டிகள் எல்லா ரகங்களும் கைவசம் இருப்பிலிருக்கின்றன. விலை சாப்தாவுக்கு கீழ் கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

S. திருமலைசாமி செட்டி,
A. முருகேச முதலி.
No. 12 கச்சேரி வீதி, திருப்பூர்.

## காங்கிரஸ் அத்தாக்ஷி பெற்ற சுத்தகதர்.

தமிழ்நாடு காங்கிரஸ் கதர் போர்டின் விலைக்கே விற்கப்படும். எல்லா ரகங்களும், கிடைக்கும் விலை ஜாபிதாவுக்கும் மற்ற விபரங்களுக்கும், கீழ் கண்ட விலாசத்துக்கு எழுதவும். சாம்பிள் (மாதிரிக்கு) 4 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

கற்பக விநாயகர் கதர் நிலயம்.
ஊத்துக்குளி S. I Ry.

## மூன்று மாதத்தில் மோட்டார் ஓட்ட கற்றுக் கொள்ளலாம்.

1916-ஞு ஸ்தாபிக்கப்பட்டது.

எங்கள் கம்பெனியில் மோட்டார் வண்டிகளை ஓட்டவும், பிரிக்கவும், பூட்டவும் வேறு பல சீர் திருத்தங்கள் செய்யவும் கற்றுக் கொடுக்கப்படும். தேர்ச்சியடைய மூன்று மாதம் ஆகும். தேர்ச்சி அடைந்த பின்பு கவர்ன்மெண்டு லைசென்சும் எமது கம்பெனி சர்ட்டிபிகேட்டும் கொடுக்கப்படும்.

மற்ற விபரத்திற்கு நேரில் எழுதி தெரிந்துகொள்ளலாம்.

மதருஸ் தென்னிந்தியா
மோட்டார் இன்சினீயரிங் ஒர்க்ஸ்,
மைலாப்பூர்-மதருஸ்.

## திருப்பூர் சுத்த கதர் ஜவுளிகள்.

பலரகம் வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளை பீஸ் ரகங்கள், ஷர்ட்டிங், கோட்டிங், சீட்டி தினுசுகள், தாவணிகள், சுங்கடி சேலைகள் இன்னும் அநேக தினுசுகள் எங்களிடத்தில் கிடைக்கும். தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள். வி. பி. அனுப்ப முடியாத வெளிநாடுகளுக்கு பூராத் தொகையையும் முன் பணமாக அனுப்பவேண்டும்.

(அத்தாட்சி பத்திரம்.)

ஸ்ரீமான் ஆர். எம். எஸ். சிதம்பரம் செட்டியார், முத்துசாமி செட்டியார் கைநூலால் கைத் தறியால் தயார்செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்திசெய்து நியாயமான விலைக்கு விற்றுவருகிறார்.

S. இராமநாதன்: காரியதரிசி, கத்தர் இலாகா

விலாசம்:—
ஆர். எம். எஸ் சிதம்பரம் செட்டியார்,
முத்துசாமி செட்டியார்,
கத்தர் டிப்போ, திருப்பூர். (தென் இந்தியா)

## கத்தர் வியாபாரிகளுக்கு அறிக்கை.

தமிழ்நாடு கத்தர் போர்டின் அத்தாட்சிப்பத்திரம் பெற்றிருக்கிறது. எங்கள் கதர் ஸ்டோரில் எல்லா விதமான தினுசுகளும் தயாராகிறது. கதர் போர்டின் விலைக்கே கொடுக்கிறோம். அட்வான்சுடன் ஆர்டர் அனுப்புங்கள்.

கே. எஸ். ஆர். எம். ராமசாமி செட்டியார்,
கத்தர் ஸ்டோர் அமராவதிபாளையம்,
பொன்னுக்காளிபாளையம் போஸ்டு,
(திருப்பூர் மார்க்கம்.)

# பார்ப்பனரல்லாதார் இயக்கம்.

இவ்வியக்கம் பிறந்து சுமார் பத்தாண்டுகள் ஆகின்றன. இது முதல் முதல் நமது சென்னை மாகாணத்தில் காலஞ்சென்ற டாக்டர் நாயர்பெருமான் சர். பி. தியாகராயசெட்டியார் முதலியஇவர்களால் நாட்டப்பட்டது. இப்போது நமது தேசம் பூராவும் படர்ந்து பலனளித்து வருகின்றது. இப் புனித இயக்கத்தை சில எதிரிகள் பார்ப்பன துவேஷத்தால் ஏற்பட்டதென்றும் சர்க்காருக்கு உதவி செய்ய ஏற்பட்டதென்றும் சுயராஜ்யம் பெறுவதற்கு முட்டுக்கட்டையாய் ஏற்பட்டதென்றும் உத்தியோகம் பெறுவது அதின் லக்ஷியம் என்றும் பலவிதமாகச் சொல்லி வருகிறார்கள். உண்மையை அறிந்தவர்கள் இப் பிதற்றுதலுக்கு சற்றும் இடந்தரார். ஆனால் சில சுயநலக்காரர்கள் ஒன்றுமறியாத ஏழை மக்களை ஜஸ்டிஸ் கட்சி என்றால் தேசவிரோதக் கட்சியென்று ஒரே வார்த்தையில் அடக்கி ஏமாற்றுகிறார்கள். அதற்குச் சாட்சியாக சில பத்திரிகைகளும் சான்றாக நிற்கின்றன. இக்காலத்தில் பத்திரிகைகளில் வெளிவருகிற விஷயங்களை சாமான்யமாய் நம்பத்தக்கதேயில்லை. பொய் என்பது [illegible] விளங்குகிறது. உண்மையாய் நடக்கும் பத்திரிகைகளுக்குத் தேசத்தில் செல்வாக்கில்லை. இதைப்பற்றி அதிகம் எழுதவேண்டியதில்லை. சென்னைத் தேர்தல் கூட்டங்களின் பிரசுரங்களே போதிய சான்றாகும். ஜஸ்டிஸ் கட்சி கூட்டத்தில் 5000 பேர் இருந்தால் இரண்டு பூஜ்ஜியம் அச்சேறுவதில்லை. சுயராஜ்யக் கட்சி கூட்டம் 50 பேர் இருந்தால் அச்சேறும்போது இரண்டும் கூடுமானால் இன்னொரு பூஜ்ஜியமும் சேர்த்து ஆக 5000 மோ 50000 என்று கூட்டி அச்சேறிக்கொள்ளுகிறது. உண்மையை நேரில் பார்த்த என் போன்றவர்கள் அறியக்கூடுமே தவிர பத்திரிகையைப் பார்த்து எப்படி அறியமுடியும்? நிற்க,

இவ்வியக்கம் ஏற்படுவதற்கு முன் சர்க்கார் உத்தியோகங்களிலும் சரி, காங்கிரஸ் முதலிய தேச மகா சபைகளிலும் சரி. 100-க்கு 97 பேர்களடங்கிய பார்ப்பனரல்லாதார்கள் நூற்றுக்கு மூன்று பேரும், நூற்றுக்கு மூன்று பேர்களடங்கிய பார்ப்பனர்கள் நூற்றுக்கு 97-பேர்களும் இருந்தார்களென்பது வாசகர்கள் மறக்கமாட்டார்கள். இது தலைகீழ் நியாயமா, அல்லவா என்று கேட்கிறேன். இதை யாராவது சொன்னால் தேசம் பெரிதா; வகுப்பு பெரிதா; இதைப் பேசலாமா; என்கிறார்கள். தனக்கு மிஞ்சின தர்மமுண்டோ! தான் நாயினும் கடையாய் அலைந்து கொண்டிருக்கும்போது தேசத்தைக் கவனிப்பாருமுண்டோ? தான் சரியாய் இருந்த பின்னல்லவோ அடுத்ததைக் கவனிக்க முடியும்? ஒருவனைத் தொட்டால் பார்த்தால் தீட்டு; சரியாய் உட்கார்ந்தால் இது கலியுக தர்மம் என்று வயிற்றெரிச்சல் படுவதும் எவ்வளவு அந்தஸ்துடையவரானாலும் மரியாதையின்றிப் பேசுவதும் பார்ப்பனரைத் தவிர மற்றெல்லா ஜாதியினரும் ஒரே வகுப்பாகிய "சூத்திரன்" என்றழைப்பதையும் சகித்துக்கொண்டு சுயமரியாதையும் பிறப்புரிமையுமிழந்து தேசம் பெரிது என்று எல்லோரும் வாய் வேதாந்தம் பேச முடியுமோ? ஒருக்காலும் முடியாது. அதினால்தான் உலகத்தில் கடவுளால் படைக்கப்பட்ட சர்வ ஜீவன்களும் ஒன்றென்றும் அவரால் அளிக்கப்பட்ட ஜலம், காற்று, வெளிச்சம் முதலியன எல்லோருக்கும் பொதுவென்றும் அதுபோலவே நமது தேசத்தில் பிறந்த எல்லா மக்களுக்கும் அவரவர்கள் விகிதாசாரப்படி சுகதுக்கங்கள் உரித்தானவென்றும் இது ஒருவர் கொடுக்க மற்றவர்கள் வாங்கிக் கொள்ள ஏற்பட்டதல்லவென்றும் ஒவ்வொருவரும் முயற்சித்து அடையக்கூடியதென்றும் தெரிந்து, வெகு காலத்திற்கு முன்னமே அடையக்கூடிய ஒரு உரிமையை நமது மடமையாலும் குருட்டு நம்பிக்கையாலும் கட்டுக் கதைகளாலும் ஏமாந்துபோய் விட்டோமென்பதையுணர்ந்து பார்ப்பனர்களைப் போல் பார்ப்பனரல்லாதாரும் கல்வி, கைத்தொழில் உத்தியோகம் முதலியவைகளைப் பெறுவதற்கு ஒரு பொக்கிஷமாக ஜஸ்டிஸ் இயக்கம் தோன்றிற்று. இதற்காக யாரும் வயிற்றெரிச்சல் படத் தேவையில்லை. நான்கு பேருக்குக் கிடைத்த ஒரு உணவை சரியாகப் பங்கிட்டு சாப்பிடுவதாயிருந்தால் ஏன் ஒருவர் பேரில் ஒருவர் மாச்சரியப்படவேண்டும்? ஆனால் அதே உணவை ஒருவருக்கு சரி பாதியாகவும், மூன்று பேருக்கு பாதியாகவும் கொடுத்துவிட்டு, தேசத்திற்காக நான் இதை சாப்பிடுகிறேன், நீங்களும் தேசத்திற்காக குரோதம் பாராட்டாமல் அதைத் தின்று ஜீவியுங்கள் என்று சொன்னால் எத்தனை நாளைக்கு சகிக்க முடியும்? அப்படிக் கூடாது. நாம் எல்லாம் சரியாக வைத்துக்கொண்டு சாப்பிட்டு சமபலவான்களாகத் தோளோடு தோள் சேர்ந்து நின்று தேசத்திற்காகப் போராடுவோம் என்று சொல்லுவது வகுப்புத் துவேஷமா? தேசத் துரோகமா? ஒன்றுமில்லை.

ஆகையால் யாருடைய முன்னேற்றத்திற்கும் தடையாயில்லாமல் பார்ப்பனரல்லாதார் முன்னேற்றமடைய வேண்டுமென்கிற ஒரே மேலான கொள்கையுடன் இந்த இயக்கம் தோன்றிற்று. அது உண்மையும் சத்தியமும் அடிப்படையாய்க் கொண்டதான படியால் காட்டுத் தீபோல தேசம் பூராவும் பரவிவருகிறது. இது கடவுள் கட்டளை. இதற்காக ஏன் பார்ப்பனர்கள் இரவு பகலாக அடித்துக்கொள்ள வேண்டும்? பார்ப்பனரல்லாதார்களும் நமது சகோதரர்கள என்ற உணர்ச்சி கொஞ்சமாயினுமிருந்தால் நமது முன்னேற்றத்திற்கு ஆதரவல்லவோ தரவேண்டும்? அதைவிட்டு இதற்கு இடையூறு செய்வார்களா? இந்த எண்ணமுடையவர்களிடம் (பார்ப்பனர்களிடம்) இனி எந்தப் பார்ப்பனரல்லாதான் சகோதர வாஞ்சையாயிருப்பான்? நமது தமிழ் நாட்டில் சுயராஜ்யக் கக்ஷித்தலைவர்களாகிய பார்ப்பனர்கள், இந்தஇயக்கத்தை ஒழித்துவிடச் செய்கிறமுயற்சி கொஞ்சமா? பார்ப்பனரல்லாத மந்திரிகளை ஒழித்துவிட்டு அதற்குப் பதிலாக ஐரோப்பியர்களையாவது வைத்து பார்ப்பனரல்லாதாரைப் படுகுழியில் தள்ள யோசித்திருப்பது, கார்ப்பரேஷன்கமிஷனர் விஷயத்தில் இவர்கள் நடந்துகொண்டதே போதிய சான்றாகும். சட்டசபை நடவடிக்கைகளைக் கவனித்தவர்களுக்கு ஜாதித் துவேஷம் எங்கிருப்பதென்பதும் புலப்படும்.

தவிர, இந்த இயக்கம் தோன்றிய பிறகு பார்ப்பனரல்லாதார்கள் பலர் எல்லாத்துறையிலும் முன்னேறி வருவதும் தாழ்த்தப்பட்டவர்கள் மற்றவர்களைப் போல் உரிமை பெற்றுவருவதும் உண்மையே யானாலும் பார்ப்பனர்களுக்குக் கிடைக்கக்கூடிய அளவுக்கு எத்தனையோ மடங்கு உத்தியோகங்கள் அதிகப்படியாய் இன்னும் பெற்று வருவது புள்ளி விவரங்களைப் பார்த்தால் தெரியவரும். அப்படியிருந்தபோதிலும் கூச்சல் போடுவது நின்றபாடில்லை. என்ன ஆசை! என்ன ஆசை! தமிழ் நாட்டுச் சுயராஜ்யக்கக்ஷி காங்கிரஸ் கக்ஷி யென்று பேர்வைத்துக்கொண்டு உத்தியோக வேட்டையாடி வருவது உலகறிந்த விஷயம். உத்தியோகம் ஏற்றுக்கொள்ளுவதில்லையென்று பேசுகிறார்கள்; ஆனால் இவர்கள் ஜஸ்டிஸ் கட்சி மந்திரிகள் என்ன செய்தார்கள் என்று கேட்டதில் தவறுவதில்லை. எதற்காக இவர்களுக்கு இந்தக்கவலை? எங்களையனுப்புங்கள் என்று சொல்வது மறைந்திருக்கிறது. நமது மந்திரியார்கள் செய்திருக்கும் வேலை அபாரமானது. அவர்கள் படாடோபமில்லாமல் தாங்கள் செய்த வேலை யின்னதென்று பெருமை பேசிக் கொள்ளாமல் நமது தேசத்திற்கும் நமது மக்களுக்கும் அரிய வேலை செய்து வருகிறார்கள். அந்தப் பிரகாசத்தைக் கரிய மேகங்களாகிய பார்ப்பனப் பத்திரிகைகள் மறைத்து விடுகின்றன. ஆனால் காற்றின் வேகத்தால் மேகம் சின்னாபின்னப் படும்போது உண்மைச் சூரியன் பிரகாசித்து வருகிறான். சமீபத்தில் சென்னை ஹைக்கோர்ட்டுக் கடற்கரையில் டாக்டர் நாயர் பெருமான் திருநாளன்று கனம் மந்திரி பனகால் ராஜா அவர்கள் தலைமையில் கூடிய கூட்டத்தில் பேசிய தலைவர்களும் பத்தாயிரக் கணக்கான பார்ப்பனரல்லாதாரும் எவ்வளவு குதூகலத்துடனிருந்தார்களென்பதை நான் நேரில் பார்த்தவனானபடியால் பார்ப்பனரல்லாதாரியக்கம் வெகு பலமாய் வேரூன்றி யிருக்கிறதென்பதையும் அது சூழ்ச்சிகளில் அழிந்து போகாதென்பதையும் பொது ஜனங்களுக்கு விண்ணப்பம் செய்து கொண்டிருக்கிறேன்.

அடுத்து வருந்தேர்தலில் ஒவ்வொரு பார்ப்பனரல்லாதாரும் தங்களுக்குச்சுயமரியாதையும் சுய ஞானமும் இருக்கிறதென்பதைத் தேசத்தாருக்குக் காண்பிக்க வேண்டி பார்ப்பனரல்லாத கக்ஷியாரையே தேர்ந்தெடுத்தனுப்ப வேண்டியது. இதை விட்டு காங்கிரசு சுயராஜ்ஜியக்கக்ஷியென்று சொல்லித்திரிகிற பார்ப்பனர்களையாவது அவர்கள் பின்னால் எதை எதையோ நத்திக் கொண்டு திரிகிற பார்ப்பனரல்லாதாருக்காவது ஓட் செய்து அனுப்புவீர்களானால் நீங்கள் 100-க்கு 97 பேர்கள் உள்ள பார்ப்பனரல்லாதாருக்கும் தேசத்திற்கும் வஞ்சகம் செய்தவர்களாவதுந் தவிர, "சூத்திரன்" மூளையற்றவன் என்று சொல்வதையும் ஊர்ஜிதம் செய்தவராவீர்கள். புன்சிரிப்புக்காகவும் மோட்டார் வாகனத்திற்காகவும் பத்திரிகையில் பிரசுரிப்பதற்காகவும் மானத்தை விற்காதீர்கள். ஜாக்கிரதை! ஜாக்கிரதை!

திருப்பதி

# நாயுடு, முதலியார், நாயக்கர்.

## சென்னையில் டாக்டர் வரதராஜுலு நாயுடுகார்.

### (தற்கால நிலைமை).

சென்னையில் இம்மாதம் 17-ந் தேதி திருவல்லிக்கேணி கடற்கரையில் ஸ்ரீமான் எஸ். சீனிவாசய்யங்கார் அக்கிராசனத்தின் கீழ் டாக்டர் நாயுடுகார் ஒரு நீண்ட பிரசங்கம் செய்தார். அவை பல பத்திரிகைகளில் பலவிதமாக வெளிப்பட்டிருந்தாலும் அவரது "தமிழ் நாடு" பத்திரிகையில் சுருக்கமாக வெளி வந்திருக்கிறது. அவற்றில் சில உண்மைகள் விளங்குவதை மாத்திரம் நாம் இதனடியில் குறிப்பிடுகிறோம்.

அதாவது "பெரிய சந்தேகம்" என்ற தலைப்பின் கீழ் "இந்த சர்க்காரை இப்பொழுதே நாம் நிறுத்திவிட முடியும். ஆனால் அதற்குப் பிறகு (நிருத்திய பிறகு) இத்தேசத்தை எப்படி நிர்வகிப்ப தென்பதுதான் இப்பொழுது பெரிய சந்தேகம்" என்று பேசியிருக்கிறார். தற்கால நிலைமையில் யோக்கியமான ராஜீய வாதிகளின் கருத்து இதுவேதான். ஏனெனில் நமது தேசத்தில் ஒருவன் உயர்ந்தவன் என்றும் பிராமணன் என்றும், மற்றவன் தாழ்ந்தவன் என்றும், சண்டாளன், பார்க்கக்கூடாதவன், தெருவில் நடக்கக் கூடாதவன் என்றும், ஒரு மதம் உயர்ந்த மதம், மற்றொரு மதம் தாழ்ந்த மதம், ஒரு வகுப்பார்தான் மோக்ஷ உள்ளவர்கள், மற்ற வகுப்பார் மோக்ஷ இல்லாதவர்கள் என்று சொல்லிக் கொண்டு அவனவன், சுயநலத்துக்காக மானம் கற்பு மனச்சாக்ஷி இவைகளை விற்று ஏழை மக்களை நசுக்கிப் பிழைத்துக் கொண்டிருக்கிற காலத்தில், இந்த சர்க்கார் நின்று போனால் தேசம் என்ன கதி அடையும் என்பதை யோசித்துப் பார்த்தால் "இந்த சர்க்காரை நடைபெற வொட்டாமல் செய்கிறோம், வெள்ளைக் காரரையே ஓட்டி விடுகிறோம்" என்று சொல்லி ஓட்டு கேட்பவர்கள் எவ்வளவு அயோக்கியர்கள் என்பது விளங்கும். இந்த உண்மையை டாக்டர் நாயுடுகார் தைரியமாய் எடுத்துச் சொன்னதற்கு நாம் அவரைப் பாராட்டுகிறோம்.

அடுத்தபடியாக "முறைகள்" என்ற தலைப்பின் கீழ் "காங்கிரஸ் முன்னிருந்த நிலைமையில் இப்பொழுதில்லை. அதில் முன்னிருந்த கட்டுப்பாடுகளும் இப்பொழுதில்லை" என்று சொல்லியிருக்கிறார். இதையும் அவர் தைரியமாய் எடுத்துச் சொன்னதற்கு நாம் பெரிதும் பாராட்டுகிறோம். ஏனெனில் காங்கிரஸ் வாதிகளென்போர்கள் காங்கிரசின் குற்றங்களை எடுத்துச் சொன்னால் பெரிய பாவமென்றும் தேசத் துரோகமென்றும் சொல்லி ஏமாற்றும் பார்ப்பனர்கள் மத்தியிலிருந்து கொண்டு காங்கிரசின் ஊழல்களை எடுத்துச் சொல்வதென்றால் அதற்கு மிகவும் தைரியம் வேண்டும். ஆதலால் நாம் இதையும் போற்றாமலிருக்க முடியாது.

மற்றோரிடத்தில் "சட்டசபைக்குச் செல்லுபவர்களால் ஒன்றும் செய்யமுடியாது" என்று சொல்லிவிட்டு "ராயல் கமிஷன் வருவதற்கு முன்பு நமது அபிப்பிராயங்களை சட்டசபைகளில் சரியாய் தெரிவிக்க உதவும்" என்று சொல்லி இருக்கிறார். இதுவும் உண்மையான விஷயம்தான். இப்போது சட்டசபைக்குப் போகிற பார்ப்பனர்கள் கருத்தும் அதுதான். ஏனெனில் இப்பொழுது கொடுத்திருக்கும் "சீர்திருத்தம்" நமது மாகாணத்தில் பார்ப்பனரல்லாதார் கொஞ்சமாவது முன்னேறுவதற்கு உதவி செய்திருக்கிறது. பார்ப்பனரல்லாத மந்திரிகள் நிர்வாகத்திற்கு வரவும் பார்ப்பனரல்லாதாரில் சிலருக்காவது உத்தியோகம் பதவி முதலியவைகள் ஏற்படவும் அதன் மூலம் பார்ப்பனரல்லாதார் சுயமரியாதையைக் காப்பாற்றப் படவும் அது உதவியாயிருக்கிறது. ஆதலால் 1929-ம் வருடம் வரும் ராயல் கமிஷனில் நமது பார்ப்பனர் தேசத்தின பேரால் சட்டசபைக்கு வந்ததாகச் சொல்லிக்கொண்டு இதுவரை பார்ப்பனரல்லாதாருக்கு ஏற்பட்டிருக்கும் நன்மைகளை அழிக்கவும் கொஞ்சமாவது கொடுத்திருப்பதாய்ச் சொல்லும் அதிகாரங்களை திருப்பி எடுத்துக்கொள்ளச் செய்து சர்க்கார் மூலம் தங்களுக்கே உத்தியோகமும் பதவியும் பெரிய சம்பளங்களும் கிடைக்கும்படியாகப் பாடு படவும், வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவம் கூடாது, எல்லாவற்றிற்கும் எல்லா வகுப்புக்கும் எல்லாமதத்திற்கும், பார்ப்பனர்கள் தாங்களே பிரதிநிதியாயிருந்து கொண்டு மற்றவர்களை மிலேச்சர், தீண்டப்படாதவர், என்று சொல்லிக் கொள்ள சவுகரியமேற்படுத்திக் கொள்ளலாம் என்பதும் தான் அவர்கள் கவலை. அதற்காகத்தான் இப்போது சட்டசபைக்குப் போக இவ்வளவு தந்திரங்கள் செய்வது என்பது தெளிவாய் விளங்க, டாக்டர் நாயுடுகாரின் மேற்கூறிய வார்த்தைகள் போதுமானது.

"பட்டதாரிகள்" என்ற தலைப்பின் கீழ், "தேர்தலுக்குக் காங்கிரஸ அபேக்ஷகர்களைத் தெரிந்து எடுக்கும்போது சிறந்த தேசாபிமானிகள் அபேக்ஷகர்களாய் கிடைக்கவில்லை" என்று சொல்லியிருக்கிறார். இதுவும் சத்தியமான வாக்கென்றே சொல்லுவோம். காரணம் அவர் என்ன சொல்லியிருந்த போதிலும் கூட "சிறந்த தேசாபிமானிகள் காங்கிரஸ் அபேக்ஷகர்களாய்க் கிடைக்கவில்லை" என்பது மிகவும் சத்தியமானது. ஏனெனில், காங்கிரசில் தேசாபிமானிகள் இல்லை என்பதை ருஜுப்படுத்த இதைவிட வேறு எதையும் அவர் சொல்லியிருக்க முடியாது.

"ஜமீன்தாரர்கள்" என்ற தலைப்பின் கீழ் 'பணக்காரருக்கு ஓட்டுக்கொடுக்கக் கூடாது' என்று சொல்லியிருக்கிறார். இதுவும் சரியான விஷயம். பணக்காரர்கள் சட்ட சபைக்குப் போனால் தங்கள் நிலைமையாகிய பணக்காரர்கள் நன்மைக்குத்தான் பாடுபடுவார்கள்; ஏழைகளைப் பற்றி கவனிக்கமாட்டார்களென்பதுதான் அதன் தத்துவம்.

"பார்ப்பனரல்லாதார்" என்ற தலைப்பின் கீழ் "ஜஸ்டிஸ் கக்ஷி பார்ப்பனரல்லாதார் முன்னேற்றத்திற்கு என்று ஸ்தாபிக்கப்பட்டது" என்று சொல்லியிருக்கிறார். இதை டாக்டர் நாயுடுகார் ஒப்புக்கொண்டதற்கு பார்ப்பனரல்லாதார் அவருக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளார்கள். ஏனெனில் நமது பார்ப்பனர் சில காலிகளுக்குக் கூலி கொடுத்து ஜஸ்டிஸ்கட்சி "சர்க்கார்கட்சி" "உத்தியோக வேட்டைக் கட்சி" "ஒரு சிலர் பதவிக்கேற்பட்ட கட்சி" என்று எழுதியும் பேசியும் வரும்படி செய்து பார்ப்பனரல்லாதார் கட்சியையே அடியுடன் ஒழிக்கக் கங்கணங்கட்டிக்கொண்டு வேலை செய்யும் சமயத்தில் நமது டாக்டர் நாயுடுகாரவர்கள் "ஜஸ்டிஸ் கட்சி பார்ப்பனரல்லாதார் முன்னேற்றத்திற்காக ஏற்பட்ட கட்சி" என்று சொல்லி பார்ப்பனர்களின் சூழ்ச்சிகளும், தந்திரங்களும் அடங்கும்படி கர்ஜித்ததற்கு நன்றி பாராட்ட வேண்டியது நமது கடமை.

அல்லாமலும், பார்ப்பனரல்லாதாருக்கு சர்க்கார் உத்தியோகங்கள் அதிகமாகக் கிடைப்பதின் மூலமாய்த்தான் முன்னேற முடியுமென்று அறிவித்து விட்டே அவர்கள் வேலை செய்து வருகிறார்கள், ஆதலால் "உத்தியோகம் பெறுவது தங்கள் கொள்கை என்று பகிரங்கமாகச் சொல்லும் ஒரு கக்ஷியாரை எப்படிப் பதவி வேட்டைக்காரர் என்று சொல்ல முடியும்?" என்று வினவியிருக்கிறார். இது பார்ப்பனருக்கு மாத்திரமல்லாமல் 'பார்ப்பனரல்லாதாரிலேயே சில பைத்தியக்காரர், பார்ப்பனரல்லாத கக்ஷியினரைப் பதவி "வேட்டைக்காரர்" என்று சொல்லித் திரிவோர்களுக்கும் புத்தி வரும்படி செய்திருக்குமென்றே நினைக்கிறோம்.

"பூர்வீக பிராமணர்" என்ற தலைப்பின் கீழ் "இப்போது பார்ப்பனர்களே எங்கு பார்த்தாலும் உத்தியோகங்களில் நிறைந்திருப்பதால் தங்களுக்கும் உத்தியோகம் கிடைக்கவேண்டுமென்று ஜஸ்டிஸ் கக்ஷியார் கேட்கிறார்கள். தங்களுக்குரிய பங்கைக் கொடுக்கும்படி ஒருவர் கேட்கும்போது அதைப்பதவி வேட்டை என்று எப்படிச் சொல்ல முடியும்?" என்றும் சொல்லியிருக்கிறார். இது ஒரு வகுப்பார் உரிமை கேட்பதால் தேசம் கெட்டுப் போகுமென்று சொல்லித் திரிபவர்களுக்குச் சரியான பதிலாகும்.

"பார்ப்பனரின் கொடுமை" என்ற தலைப்பின் கீழ் "வெள்ளையர்களிடம் இந்தியர் என்ன கேட்கிறார்களோ அதையேதான் பார்ப்பனர்களிடம் பார்ப்பன ரல்லாதார் கேட்கிறார்கள்" என்று சொல்லி யிருக்கிறார். அல்லாமலும் "குருகுலப் போராட்டத்திலிருந்து நான் பார்ப்பனர்களிடம் வைத்திருந்த நம்பிக்கையை இழந்து விட்டேன்" என்றும் "பார்ப்பனர்களது கொடுமைகளின் காரணமாகவே தமிழ்நாடு காங்கிரஸ் நிர்வாகக் கமிட்டி அங்கத்தினர் பதவியை ராஜினாமா செய்து விட்டேன்" என்றும் சொல்லியிருக்கிறார். இதனாலேயே காங்கிரஸ் பார்ப்பனர்கள் ஸ்தாபன மென்பது யாவருக்கும் நன்றாய் விளங்கும். இல்லாவிட்டால் பார்ப்பனர்கள் கொடுமைக்காக ஒருவரும் காங்கிரஸ் பதவி

யிலிருந்து விலகவே மாட்டார்கள் என்பதை யாவரும் சுலபத்தில் உணரலாம்.

"ஜஸ்டிஸ் கக்ஷிக்கு வேண்டுகோள்" என்ற தலைப்பின் கீழ் "வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் நல்லதல்ல, ஆனால் தங்களுடைய நன்மைக்கு ஆபத்து வராமல் காத்துக்கொள்ள தற்காலஏற்பாடாக ஏதாவது ஒன்றைச்செய்து கொள்ளலாம்" என்றும் "ஒருவருக்கொருவர் நம்பிக்கை யேற்படுகிற வரையில் இம்முறையைக் கைக்கொள்ளலாம்" என்றும், "ஜஸ்டிஸ் கக்ஷியாருக்கு வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை விடமுடியாதென்ற எண்ணமிருந்தால் அவர்கள் காங்கிரசில் வந்து ஏன் வற்புறுத்தக் கூடாது? அவ்வாறு செய்யும்படி அவர்களைக் (ஜஸ்டிஸ் கக்ஷியாரை) கேட்டுக்கொள்ளுகிறேன்" என்றும் சொல்லியிருக்கிறார்.

இவற்றில் மேற்கூறியஇரண்டொருவார்த்தைகளைத் தவிர மற்றவைகளைமாத்திரம்நாம் ஆதரிக்க முடியாதிருப்பது பற்றி வருந்துகிறோம். டாக்டர் நாயுடுகார் வகுப்புவாரிப்பிரதிநித்திதுவம் தப்பென்றாலும் "ஒருவருக்கொருவர் நம்பிக்கை ஏற்படும் வரை தற்காலயேற்பாடாக ஏதாவதொன்றைச் செய்து கொள்ளலாம்" என்று சொல்லுகிறார். 'அது எது', 'என்ன செய்துகொள்ளலாம்', என்று சொல்லியிருந்தால் நன்றாயிருந்திருக்கும். ஒருவருக்கொருவர் நம்பிக்கையில்லாததால்தான் தனிப்பிரதிநிதித்துவம் கேட்கிறார்கள் என்கிறதை ஒப்புக்கொண்ட டாக்டர் நாயுடுகார் தானும் ஒருவழி சொல்லாமல் பிறத்தியார் கேட்பதையும் தப்பென்று சொன்னால் வேறு கதி என்னவென்பதுதான் நமது கவலை. ஆனால் சமீபத்தில் டாக்டர் நாயுடுகாரவர்கள் இரண்டோர்இடங்களில் பேசியபோது, சில வகுப்பாருக்கு வாக்காளர் தனித் தொகுதியுங்கூட கொடுக்கவேண்டுமென வற்புறுத்தியுள்ளார். சில இடங்களில் பேசும்போது ஜஸ்டிஸ் கட்சியார் கேட்கும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் தப்பல்ல என்றும் சொல்லியிருக்கிறார். நாமும் இரண்டொரு சமயத்தில் டாக்டர் நாயுடுகாரின் அபிப்பிராயத்தைப்பற்றி எழுதும்போது டாக்டர்நாயுடுகார் வகுப்புவாரிப்பிரதிநிதித்துவம் அடியோடு கூடாதென்று சொல்லவில்லையென்றும் அதில்லாமல் வேறு வழியில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தின் கருத்தைப் பூர்த்தி செய்ய முடியுமாவென்று பார்க்கிறார் என்றும், முடியாவிட்டால் அவர் என்ன செய்வாரென்பது நமக்குத் தெரியுமென்றும் எழுதியிருக்கிறோம். ஆதலால் அவர் தற்காலநிலையில் வகுப்புவாரிப்பிரதிநிதித்துவக் கொள்கைக்கு விரோதியல்லவென்பதும் அதனுடைய வழிகளில்தான் கொஞ்சம் குழப்பமாயிருக்கிறார் என்பதும் நமது நம்பிக்கை. அப்படியில்லாவிட்டால், ஜஸ்டிஸ் கட்சியாருக்கு வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கேட்க சுதந்தரம் உண்டென்றும் காங்கிரசில் வந்து கேட்கும்படியும் சொல்லியிருக்கமாட்டார்.

ஆனால் பார்ப்பனரல்லாதார் எழுபேரும் பார்ப்பனர் இரண்டுபேருமாயிருக்கும் காங்கிரஸ் நிர்வாக சபையிலிருந்து, டாக்டர் நாயுடுகார் போன்ற வீரர்களே பார்ப்பனர் கொடுமையைச் சகிக்கமாட்டாமல் மனம் நொந்து அதைவிட்டு விலகவேண்டிய அவசியம் நேர்ந்திருக்கும்போது ஜஸ்டிஸ் கட்சிக்காரர்கள் எத்தனை பேர்கள்தான் காங்கிரசுக்குள் வந்தாலும் பார்ப்பனர் கொடுமையிலிருந்து தப்ப முடியுமா? அல்லாமலும் காங்கிரசிலிருந்து வகுப்புவாரி உரிமையை வற்புறுத்தும்படி டாக்டர் நாயுடுகார் கேட்டுக்கொள்ளுகிறார். இதுவும் நமக்கு ஆச்சரியமாகவேயிருக்கிறது.

காங்கிரஸ் கமிட்டிக்கு டாக்டர் நாயுடுகார் தலைவராகயிருந்த சமயத்தில் ஸ்ரீமான் திரு. வி. கலியாண சுந்தர முதலியார் தலைமை வகித்ததும் 100-க்கு 90-பேர் பார்ப்பனரல்லாதாராய்க் கூடியிருந்ததுமான தமிழ் மாகாண மகாநாட்டில், மும்முறை காங்கிரஸ் கமிட்டி காரியதரிசியாகவும், இரண்டு முறை கமிட்டித் தலைவராகவும், ஒரு முறைதமிழ் மாகாண மகாநாட்டுக்குத் தலைவராகவும் மூன்று முறை ஜெயிலுக்குப் போனவரென்று சொல்லப்பட்டவராகவுமுள்ள ஒரு இராமசாமி நாயக்கர் என்பவரே வகுப்புவாரி தீர்மானம்காங்கிரசின்பேரால்கொண்டுபோய் பிரேரேபிக்கக்கூட அனுமதி கிடைக்காமல் ஓடிப்போகும்படி நேர்ந்திருக்கும்போது, ஐயோ பாவம்! எவ்வளவோ கஷ்டப்பட்டுக் கொண்டும் காங்கிரஸ் உலகத்தில் கெட்ட பெயர் வாங்கிக் கொண்டுமிருக்கும்படியான ஜஸ்டிஸ் கட்சியார் காங்கிரசில் வந்து சேர்ந்தால் அவர்களைப் பார்ப்பனர்கள் சும்மாவிடுவார்களா? இந்நிலைமையில் இது ஆகிற காரியமா? ஒரு சமயம் தமிழ் நாடு கமிட்டியில் ஒப்புக்கொண்டாலும் அகில இந்திய காங்கிரசில் ஒப்புக்கொள்ளும்படி பார்ப்பனர் சம்மதிப்பார்களா? இவைகளை யோசித்துப் பார்த்தால் உண்மை விளங்காமல் போகாது. ஜஸ்டிஸ் கட்சியாரைத் தற்கால காங்கிரசுக்குக் கூப்பிடுவதானது பார்ப்பனரல்லாதாரியக்கத்தை ஒழிப்பதாகுமே தவிர அவர்களுக்கு அநுகூலம் செய்வதாகாதென்றே உறுதி கூறுவோம். இது "அங்கேண்டி மகளே ஆலாய்ப் பறக்கிறாய், இங்குவா காற்றாய்ப் பறக்கலாம்" என்பது போலிருக்கிறது. நம்மால் ஜஸ்டிஸ்கட்சிக்கு உதவி செய்ய முடியாவிட்டாலும் நாம் அதற்குக் கெடுதிசெய்யாமலிருந்தாலே கோடிக் கன்னிகாதானம் செய்த பலனுண்டு. ஆதலால் இந்த இரண்டொரு விஷயத்தைத் தவிர மற்ற விஷயங்களில் நமது டாக்டர் நாயுடுகாரவர்கள் சொன்னதாக நாம் "தமிழ்நாடு" பத்திரிகையிலிருந்து மேலே எடுத்துக்காட்டிய விஷயங்கள் முழுவதையும் மனப்பூர்வமாய் ஆதரிக்கிறோம்.

இதற்கு முன் ஸ்ரீமான் திரு. வி. கலியாண சுந்தர முதலியாரவர்கள் எழுதிய "இந்தியாவின் தலையெழுத்து" என்ற விஷயமும் "குடி அரசு" எழுதிவரும் விஷயமும் டாக்டரவர்கள் சொன்னதாக இதில் எடுத்தாண்டிருக்கும் விஷயமும், பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் என்கிற விஷயத்தைப் பொறுத்தவரையிலும் தற்கால காங்கிரசின் யோக்கியதையைப் பொறுத்தவரையிலும் ஜஸ்டிஸ் கட்சியைப் பொறுத்த வரையிலும் யாதொரு அடிப்படையான வித்தியாசமும் இருப்பதாய் நாம் நினைக்கவில்லை.

ஆனால் நாம் பச்சைத் தமிழில் எழுதுகிறோம், பேசுகிறோம்; டாக்டர் அவர்கள் ராஜதந்திரத் தமிழில் எழுதுகிறார், பேசுகிறார்; ஸ்ரீமான் முதலியாரவர்கள் சங்கத் தமிழில் எழுதுகிறார், பேசுகிறார்; இது தான் வித்தியாசமே தவிர வேறில்லை. பல காரணங்களால் பலருக்குப் பச்சைத்தமிழ் வாராது, இதற்காக வேண்டி ஒருவரும் கலக்கமுற வேண்டியதில்லை. தேர்தல்கள் சமீபித்துவிட்டன; சூழ்ச்சிகள் மலிந்துவிட்டன; தமிழ் மக்கள் பாஷை வித்தியாசத்தைப் பார்த்துக்கொண்டிருப்பது பைத்தியக்காரத்தனம். திருட்டுப்போன பின்பு கதவைத் தாழ்ப்போடுவதில் பயனில்லை. ஆதலால் பார்ப்பனரல்லாதார் உடனே ஒன்று கூடித் தேர்தலில் தங்கள் சமூக முன்னேற்றத்திற்கும் சமூகக் கட்டுப்பாட்டிற்கும் பத்திரத்திற்கும் சுய மரியாதைக்கும் பங்கமில்லாதபடி நடந்து கொள்ளவேண்டியது ஒவ்வொரு பார்ப்பனரல்லாதாரின் முக்கிய கடமை யாகும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

## தமிழ் சர்வ கலாசாலைக் கமிட்டி

தமிழ் நாட்டிற்கென ஒரு சர்வகலாசாலை ஏற்படுத்துவான் வேண்டி சின்னாட்களாகப் பல தமிழர் கிளர்ச்சி செய்து வருகின்றார்கள். இக்கிளர்ச்சியை ஒடுக்குவான் வேண்டியும், தமிழ் கலாசாலையே ஏற்படாதிருக்க, பார்ப்பனர்கள்செய்துவரும் சூழ்ச்சி முறைகளையும் அனேகர் அறிந்திருக்கலாம். கடைசியில் இக்கிளர்ச்சியை ஒடுக்குவதற்கு வழியில்லாது போய் தமிழ் சர்வகலாசாலை ஏற்படுத்த வேண்டுமென்று ஏற்பட்டுவிட்டது. இதற்கென ஒரு கமிட்டியும் நியமிக்கப்படலாயிற்று.

இக்கமிட்டியும் பெருங் கபடத்துடனேயே நியமிக்கப்பட்டுள்ளதெனக் கூறவேண்டும். ஏனெனில் தமிழ் மொழியின் ஆணிவேர் நுனிவரை நுணுகி ஆராய்ந்து தமிழ் மொழியே உயர்தனிச் செம்மொழியெனக் கொண்டு, தமிழையே உயிரினும் பெரிதாய் ஓம்பி வளர்த்து, அதற்கெனவே அருந்தொண்டாற்றிவரும் திருவாளர்கள் சுவாமி வேதாச்சலனார் ந. மு. வேங்கடசாமி நாட்டார், த. வே. உமாமகேசுவரம் பிள்ளை, பா. வே. மாணிக்க நாயக்கர், கா. சுப்பிரமணிய பிள்ளை, மு. சா. பூரணலிங்கம் பிள்ளை முதலியோரை நியமிக்காது, ஆரியத்திற்கும் தமிழுக்கும் உள்ள பேதத்தை ஒரு சிறிதும் உணராத பலரையும் தமிழில் பற்றுடைய மிகச் சிலரையும் நியமித்திருக்கிறார்கள். இவ்வாறு அடிப்படையிலே கையை வைத்து நியமிக்கப்பட்ட கமிட்டியால் தமிழ்த் தாய்க்கு எவ்வித ஆக்கமும் அளிக்கப் பெறுதென்பதே நமது கருத்து.

## தமிழ் சுருக்கெழுத்துக்காரர் தேவை

தமிழில் சொல்வதையும் பிரசங்கிப்பதையும் சுருக்கெழுத்தில் எடுத்து எழுதக்கூடிய ஒருதமிழ் சுருக்கெழுத்துக்காரர் தேவை. அவருக்கு ஆங்கிலமும் தெரிந்திருக்க வேண்டுமென்பது அவசியமில்லை. தமிழ் சுருக்கெழுத்து எழுதுவதில் கெட்டிக்காரராயும் வாலிபராயுமிருத்தல் வேண்டும். சம்பளத்தைப் பற்றிக் கடித மூலமாய்த் தெரியப்படுத்திக் கொள்ளலாம்.

காரியஸ்தர்,
"குடி அரசு" ஈரோடு.

# முஸ்லிம் சமூகத்திற்கு சுயராஜ்யக் கட்சியார் இழைத்தகேடு.

ஜனுப் யாகூப் ஹாசனின் தடை நீக்கப்படாததற்கு சுயராஜ்யக் கட்சியினரின் சூழ்ச்சியே காரணம்.

## முஸ்லிம் பத்திரிகையின் முன்மொழி.

“ஜஸ்டிஸ் கட்சியைத்தாக்குவதற்கு முஸ்லிம் சமூகத்தை தங்கள் ஆயுதமாகக் கொள்ள சுயராஜ்யக் கட்சியார் சூழ்ச்சி செய்கிறார்கள்”

ஜனுப் யாகூப் ஹாசன் சேட் அவர்களின் தடை உத்திரவு விஷயமாய்ச் சட்ட சபையில் நிகழ்ந்த விவாதத்தைப் பற்றி “ஸைபுல் இஸ்லாம்” 24-7-26-தேதி தன் தலையங்கத்தில் எழுதியிருப்பதின் சுருக்கமாவது:-

“ஜனுப் யாகூப் ஹாசன் சேட் அவர்கள் சென்னை அரசாங்கத்தாரிடம் அனுமதி தேடியபோது அனுமதி கிடைக்காமற் போனதற்கு ஜஸ்டிஸ் கட்சியார்தான் காரணமென சுயராஜ்யக் கட்சியார் கூறுவதை நாம் ஒப்புக்கொள்ள முடியாது. ஜனுப் யாகூப் ஹாசன் அவர்களுக்கு அரசாங்கத்தார் அனுமதி கொடுக்காமற் போனதற்கு எம்மட்டும் ஜஸ்டிஸ் கட்சியினர் காரணஸ்தர்களாயிருந்தார்களெனக் கூறப்படுகின்றதோ அதற்கு மேற்கொண்டு சுயராஜ்யக் கட்சியினர்களும் காரணஸ்தர்களாயிருந்தார்களென்க் கூறுவது பொருந்தும். ஜனுப் யாகூப் ஹாசனுடைய தடையை நீக்க அரசாங்கம் புனர் ஆலோசனை செய்வதற்காக சபையை ஒத்திவைக்க வேண்டுமென்ற தீர்மானத்தை சட்ட சபையில் கொண்டுவந்து ஸ்ரீமான் சத்தியமூர்த்தி அய்யர் வெகு அட்டகாசமாகப் பேசியதன் கருத்து, தாம் பேசுகிறதையும் கொண்டுவரும் தீர்மானத்தையும் ஜஸ்டிஸ் கட்சியினர் எதிர்ப்பார்கள்; அதன் மூலமாக அவர்கள் மீது பழியை சுமத்தி ஜஸ்டிஸ் கட்சியைத் தாக்கும்படி முஸ்லிம் சமூகத்தைத் தூண்டலாம் என்பதே. இதெல்லாம் எலெக்ஷன் சூழ்ச்சியேயன்றி வேறில்லை. சட்டசபையில் தீர்மானம் கொண்டுவந்த ஸ்ரீமான் அய்யருக்குத் தாம் கொண்டுவரும் தீர்மானம் அடிபட்டுப் போகும் என்பது, ஏற்கெனவே தெரிந்திருந்தும் அதைக் கொண்டுவந்ததும் அது சம்பந்தமாக அவர் பேசிய பேச்சுகளும் வீண் வேஷமேயாகும். அத்தீர்மானத்தை சுயராஜ்யக் கட்சியினரைத் தவிர வேறு எவரேனும் கொண்டுவந்திருந்தால் ஜஸ்டிஸ் கட்சியினர் எதிர்த்திருக்கமாட்டார்களென்றே கூறலாம். ஜனுப் யாகூப் ஹாசன்மீது ஜஸ்டிஸ் கட்சியினருக்குத் தனிப்பட்ட முறையில் எவ்விதத் துவேஷமுமிருப்பதாகச் சொல்ல முடியாது. உண்மையாகவே ஜனுப் யாகூப் ஹாசன் அவர்கள்மீதுள்ள தடையை ரத்துச் செய்ய வேண்டுமென்ற நோக்கம் சுயராஜ்யக் கட்சித் தலைவர்களாகிய அய்யர்கள், அய்யங்கார்களுக்கு இருக்குமாயின் வெகு எளிதில் அவர்கள் அதை ரத்துச் செய்துவிட முடியுமென்பதை அறியாதாரில்லை. இத்தடை உத்தரவு ஒரு அய்யர் அல்லது ஒரு அய்யங்கார்மீது இருந்திருப்பின் அதை ரத்துச் செய்வதற்காக சுயராஜ்யக் கட்சியார் என்ன செய்வார்களோ அவைகளையெல்லாம் ஜனுப் யாகூப் ஹாசன் சேட் விஷயத்தில் செய்தார்களா என்று நாம் கேட்கின்றோம். அவ்வாறு அவர்கள் செய்யவுமில்லை. செய்யத் தயாராகவுமில்லை என்பதே எமது அபிப்பிராயம்.

“சுயராஜ்யக் கட்சித் தலைவர்களாகிய அய்யங்கார்கள் அய்யர்கள் இப்போது சுயராஜ்யப் போர் செய்துவருவது போலவே பெஸண்டு அம்மை, அருண்டேல், வாடியா ஆகியவர்களைச் சென்னை அரசாங்கத்தார் பாதுகாப்பில் வைத்தபொழுது ஹோம்ரூல் கிளர்ச்சிக்குத் தலைமை வகித்து அரசாங்கத்தோடு போர் செய்த ஸ்ரீமான் ஸர். சி. பி. இராமஸ்வாமி ஐயர் அவர்கள், இப்போது சட்ட மந்திரியாக இருந்து அரசாங்கத்திற்கு வேண்டிய சாதகங்களைச் செய்துவருகிறார் என்பதை சுயராஜ்யக்கட்சி ஐயங்கார்கள் ஐயர்கள் அறியாமலில்லை. அங்ஙனமிருந்தும் சுயராஜ்யக் கட்சித் தலைவர்களாவது அக்கட்சி பத்திரிகைகளாவது பிராமணரல்லாத மந்திரிகளைத் தூற்றுவதுபோல் பிராமண மந்திரியாகிய சட்ட மந்திரி ஸர். சி. பி. இராமஸ்வாமி ஐயர் அவர்கள் விஷயத்தில் குற்றம் கூறக்காணோம். அதற்கு மாற்றமாக அவர்மீது அன்பு காட்டி வருவதைக் காண்கிறோம். இதன் ரகசியத்தை நாம் அறிந்து கொள்ளக் கூடவில்லை.

“ஸ்ரீமான் சத்தியமூர்த்தி அய்யர் அவர்களுடைய தலைவராகிய ஸ்ரீமான் ஸர்.சி.பி.இராமஸ்வாமி அய்யர் அவர்களிடந்தான் ஜனுப் யாகூப் ஹாசன் அவர்களுடைய வேண்டுகோள் நிறைவேறுவதற்குரிய உயிர் காடியிருக்கிறது. வேறு மந்திரிகளுக்கு அதில் சம்பந்தமே இல்லை. இந்நிலைமையில் ஜனுப் யாகூப் ஹாசன் சேட் அவர்களின் வேண்டுகோள் நிறைவேறாமல் போனது அரசாங்க மந்திரிகளில் எவரால் என்பதை நாம் சொல்லத் தேவையில்லை. உண்மை இவ்வாறிருக்க ஜனுப் யாகூப் ஹாசன் அவர்களுடைய கோரிக்கை நிறைவேறாமற் போனதற்கு ஜஸ்டிஸ் கட்சியாரும் அக்கட்சியின் மந்திரிகளும் காரணமென்று அவர்கள்மீது வீண் பழிகளைச் சுமத்தி அவர்களை சுயராஜ்யக் கட்சியினர் தாக்குவதற்கு முஸ்லிம் சமூகத்தை ஒரு ஆயுதமாக உபயோகப்படுத்த அவர்கள் முயலுவது எம்மட்டும் பொருத்தமாகுமென்பதை நேயர்கள் யூகித்தறிய வேண்டியது.

“ஜனுப் யாகூப் ஹாசன் சேட் அவர்கள் சுயராஜ்யக் கட்சியின் ஆதரவையும் சம்பந்தத்தையும் விட்டு விலகி முஸ்லிம் சமூகத்தின் சார்பாக அபேட்சகராக நிற்க சம்மதிக்கவேண்டும். அதன்பின் முஸ்லிம் சமூகம் சுயராஜ்யக் கட்சியினரின் சம்பந்தமும் ஆதரவுமின்றித் தனியே முயற்சி எடுத்து கவர்ன்மெண்டாரை இவ்விஷயத்தில் புனராலோசனை செய்யும்படி வற்புறுத்திக் கேட்டுக் கொள்ளவேண்டிய முறைப்படி கேட்டுக்கொள்ளவேண்டும். இவ்வழியில் முஸ்லிம் சமூகம் முயற்சிக்கும் பட்சத்தில் ஜஸ்டிஸ் கட்சியினர் இதை எதிர்க்க நியாயமில்லை. இம்முயற்சியில் சுயராஜ்யக் கட்சியின் ஆதரவும் ஜஸ்டிஸ் கட்சியின் எதிர்ப்பும் நமக்குக் கூடாது. இங்ஙனமின்றி சுயராஜ்யக் கட்சியார், அவர்கள் செய்துவரும் எலெக்ஷன் சூழ்ச்சிக்கு ஆதரவாக ஜஸ்டிஸ் கட்சியைத் தாக்குவதற்கு முஸ்லிம் சமூகத்தை தங்கள் ஆயுதமாக்க கருதுவதற்கிணங்கி கூட்டங்கள், ஜஸ்டிஸ் கட்சியைத் தாக்குவதையே நோக்கமாகக்கொண்டு தீர்மானங்கள் செய்தால் அம்முயற்சியால் நாம் கோரும் கோரிக்கை சிறிதும் நிறைவேறாதென்பது திண்ணம்.”

## திரு. வெள்ளியங்கிரி கவுண்டர்

பின்வருமாறு எழுதுகிறார்:

நான் காங்கிரஸ் கட்சியிலிருந்து விலகிக் கொண்டதற்கு காரணம்:—

ஷை கட்சியின் இயக்கமானது தற்சமயம் சில முக்கிய கொள்கைகளில் அபிப்பிராய பேதங்கள் ஏற்பட்டதாயும், அதில் அதிக அநுபவமும், பொறுப்பும் வாய்ந்தவர்களுக்குள்ளும் ஒத்துழைப்புத் தன்மைகள் குறைவு பட்டதான நிலைமைகள் இருப்பதாயும் எனக்குத் தோன்றியதும் தவிர காங்கிரஸ் திட்டங்களில் சிலதுகள் மாற்றக்கூடியவைகள் என்றும் அதனால் எல்லா ராஜீயக் கட்சிகளும் ஒற்றுமையாயிருக்கலாமென்றும் எதிர்பார்க்கப்பட்டது. இப்போது அவ்வித நிலைமைகள் ஏற்படக் கூடியதாயும் தெரியவில்லை. குடித்தனக்காரனும் கிராமவாசியுமாகிய நான் ஜனப்பிரதிநிதிகளில் ஒருவனாக இருந்து காங்கிரசின் தற்கால முழுத் திட்டங்களை அநுசரித்து நடக்கவேண்டிய முறையில் நான் உண்மையில் ஜனங்களின் தற்கால அவசிய காரியங்களுக்கு நானும் உழைக்கிறவன் என்று சொல்லிக் கொள்ளுவது சரியென்றும் தோன்றவில்லை.

காங்கிரஸ் இயக்கத்திலும் அதைச் சேர்ந்த என் நண்பர்களிடமும் எனக்கு எப்போதும் உள்ள மரியாதையை நான் பெரிதும் பாராட்டியவனாக இருக்கிறேன்.

நான் காங்கிரஸ் கக்ஷி இயக்கத்தில் சேராததற்கு முன் பொது உழைப்பு விஷயத்தில் எவ்விதமாக நடந்து கொண்டேனோ அவ்விதமேதான் இப்போதும் எப்போதும் நடந்து கொள்ளுகிறவனாகவே இருக்கிறேன்.

வெள்ளக்கிணர். 24—7—26. } V.C.வெள்ளியங்கிரி கவுண்டர், M. L. C.,

# முனிசிபாலிட்டியில் சுயராஜ்யம்.

(சித்திர புத்திரன் எழுதுவது.)

கொஞ்ச நாளாக எங்கு பார்த்தாலும் முனிசிபல் சேர்மென்கள் வசூல் செய்யத் தவக்கப்பட்ட காரணத்தினால் முனிசிபாலிட்டிக்கு ஏற்பட்ட வரி நஷ்டத்தை அவ்வித சேர்மென்களிடமிருந்து வசூல் செய்யப்பட வேண்டுமென்று கவர்ன்மெண்டார் உத்திரவு போட்டு வருகிறார்கள். ஆனால் சேர்மென்கள் திருடுகிற-திருடிக்கொண்ட-பணத்தை வசூல் செய்யவும் அவர்கள் பேரில் நடவடிக்கை நடத்தவும் அதிகாரிகளும் கவர்ன்மெண்டாரும் கவலைப்படுவதேயில்லை போலிருக்கிறது. அதிகாரிகளைக்கண்டு "சேர்மென்கள் இம்மாதிரி கொள்ளையடிப்பதைப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்களே இது சரியா? என்று கேட்டால் நாங்கள் என்ன செய்வோம், நீங்கள் தானே சுயராஜ்யம் கேட்டவர்கள், நாங்கள் சுயராஜ்யம் கொடுத்து விட்டோம், அந்த நிர்வாகம் உங்கள் மந்திரிகளிடம் இருக்கிறது. அவர்களைப்போய்க் கேளுங்கள். நீங்கள் கேட்ட சுயராஜ்யத்தை நீங்கள் தானே அநுபவிக்க வேண்டும்? எங்களை ஏன் தொந்தரவு செய்கிறீர்கள்?" என்கிறார்களாம். கவர்ன்மெண்டார் என்கிற மந்திரி மார்களை இதைப்பற்றி கவனிக்கும்படி சொன்னால் "நீங்கள் தெரிந்தெடுத்த சேர்மென்தானே, அவரால் ஏற்படும் சுகதுக்கத்தை நீங்களே அனுபவியுங்கள்" என்றுசொல்லுகிறார்களாம். "நாங்கள் தெரிந்தெடுக்கவில்லை ஏமாற்றி விட்டார்கள்" என்று சொன்னால் கோர்ட்டுக்குப் போங்கள் என்று சொல்லுகிறார்களாம். ஊரில் சிநேகிதமாய் உள்ள சிலரிடம் சொல்லியாவது இதைத் திருத்தலாமென்றால் சேர்மெனின் நண்பர்கள் "இதனால் என்ன முழுகிப்போய்விட்டது, அவரும் ஒரு பார்ப்பனரல்லாதார் (நான்பிராமின்) தானே, சாப்பிட்டுப்போகட்டுமே, இதனாலேயா முனிசிபாலிட்டி முழுகிப் போய் விடும்?" என்று சொல்லி விடுகிறார்களாம்.

சாக்ஷிக்காரர்கள் காலில் விழுவதை விட சண்டைக்காரர் காலிலேயே விழுந்துவிடலாமென்று சேர்மெனிடம் போய் "ஐயா! இப்படிச் செய்கிறீர்களே, இது யோக்கியதையா? உம்முடைய அக்கிரமத்தினால் சுயராஜ்யம் என்றாலே ஜனங்கள் பயப்படும்படியாயிருக்கிறதே, கொஞ்சமாவது சர்க்காருக்கு மேலதிகாரம் இருக்கும்போதே இப்படிக் கொள்ளையடித்தால் சர்க்கார் சுத்தமாய் விலகிவிட்டால் முனிசிபாலிட்டியார் கதி யென்னவாவதென்று ஜனங்கள் நினைக்கும்படி செய்கிறீர்களே" யென்று கெஞ்சினால், சேர்மென்கள் "அதெல்லாம் சரி, அந்த தர்ம நியாயம் எனக்கும்தான் தெரியும் ஆனால் எனக்கு சோத்திற்கு வேறு வழிகாட்டுங்கள், நானும் உங்களோடு தர்ம நியாயம் பேசுகிறேன். எனக்கும் பெண்டு பிள்ளை-நல்லது-கெட்டது-இவைகளில்லையா? எந்த ஊரில் பிறந்து இந்த ஊருக்கு வந்து சும்மா உழைக்க நாமென்ன முட்டாளா? உங்கள் தகப்பன்மார் காலந்தொட்டு நான் இப்படித்தான் நடக்கிறேன்" என்றும், "ஒரு சம்பளச் சேர்மென் வைத்தாலும் மாதம் 500-ரூபாய் செலவாகுமல்லவா? அதற்கு மேலாகவா என்னால் முனிசிபாலிட்டிக்கு செலவாகி விடுகிறது?" என்று சொல்லி வருத்தப்படுகிறார்களாம்.

இந்நிலைமையில் கஞ்சிக்குங்கூட வழியில்லாத ஆட்களை சேர்மென் உத்தியோகத்தில் போட்டு அவர்கள் மீது இம்மாதிரி குற்றங்குறை சொல்லுவதைவிட, சேர்மென் வேலைக்கு வருகிறவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 500-ரூபாய் வரையில் படி உண்டென்று ஏற்பாடு செய்து விட்டால் இம்மாதிரி கஷ்டங்கள் ஏற்படாததோடு முனிசிபாலிட்டிக்கும் அதிக நஷ்டமேற்படாது, இல்லாவிட்டால் சேர்மென் மாதம் 500-ரூ. சம்பாதிக்க வேண்டியிருந்தால் முனிசிபாலிட்டிக்கு எவ்வளவு ரூபாய் நஷ்ட மேற்படுகிறது? பணம் சம்பாதிப்பதற்காக அவசியமில்லாத வேலைகள் எல்லாம் செய்ய வேண்டி நேரிடுகிறது.

உதாரணமாக சேர்மெனுக்கு ஒரு 100-ரூபாய் வரும்படி வர வேண்டுமானால் கன்றாக்டருக்கும் 200-ரூபாய்க்குக்குறைவில்லாமல் லாபமிருக்க வேண்டும். இவைகள் தவிர ஆபீசு சிப்பந்திகள் ஓவர்சியர் முதலியவர்களுக்கும் 50-ரூபாய்க்குக் குறையாமலாவது வரும்படி இருக்க வேண்டும். இதற்காக தான் குறைந்தது ஒரு 2000-ரூபாய் வேலையையாவது உற்பத்தி செய்ய வேண்டும். இம்மாதிரி இவர்கள் சாப்பிடுவதை அனுமதிக்கிறதற்குக் கவுன்சிலர்களுக்கு நல்ல பிள்ளையாய் நடந்து கொள்ளவேண்டும். அவர்களுக்கும் பல சௌகரியங்கள் செய்து கொடுக்க வேண்டும். அவர்களில் யாராவது இரண்டொரு கவுன்சிலர்கள் சாப்பாட்டிற்கு வழி இல்லாதவர்கள் வர நேர்ந்து விட்டால் அவர்களுக்கும் மாதம் 100,-50-கிடைக்கும்படி செய்ய வேண்டும். இவ்வளவுமில்லாமல் தன்னைத் தாங்கிப் பேச ஊரில் சில ஆட்களைச் சுவாதீனம் செய்து கொள்வதற்காக அவர்களுக்கு வேறேதாவது உத்தியோகமோ கன்றாக்டோ, வரி குறைவோ முதலிய உதவிகள் செய்ய வேண்டும். இவ்வளவையும் பார்த்துக் கொண்டிருக்கிற முனிசிபல் சிப்பந்திகள் சும்மா இருக்க முடியுமா? ஒருக்காலும் முடியாது. ஆதலால் அவர்கள் செய்யும் அக்கிரமங்களையும் பொறுத்துக் கொள்ள வேண்டும். இவ்வளவுமல்லாமல் ஊர் ஜனங்களிடம் பணம் வாங்க ஆரம்பித்து விட்டால் அவர்களுக்கும் முனிசிபல் வரியோ, சொத்தோ உதவ வேண்டும். ஆட்களிடம் பணம் பெற்றாக வேண்டும். இம்மாதிரி சேர்மனுக்கும் சிப்பந்திக்கும் பணம் கொடுத்தும் சிபார்சு பிடித்தும் உத்தியோகம் பெறுபவன் யோக்கியதையும், தகுதியுள்ளவனாயுமிருப்பானா? ஒருக்காலும் இருக்க முடியாது. ஆகவே எவ்வெவ்விடங்களில் நமது சுயராஜ்யம் பெற்ற ஸ்தாபனங்கள் கஷ்டப்படவேண்டியிருக்கிறது என்பதை பொது ஜனங்கள் அறிவார்களாக.

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் நாட்டில் ஆகமநெறி வழிப்பட்ட சிவாலயங்களின் தருமகர்த்தர்களும், சில கமிட்டி மெம்பர்களும் ஆகமநெறிக்கும் சைவ சமயத்திற்கும் முற்றும் விரோதமான சுமார்த்த மத சங்காராசாரியருக்கு சிவாலயத்திற்கு உரிய பொருள்களையும் எடுபிடி முதலான விருதுகளையும் கொடுத்து உபசரியாதிருப்பதோடு சிவாலயத்தில் சிவார்ச்சனை செய்ய இடங்கொடாமலிருக்கக்கடவர்கள். சைவர்களும் சைவாதீனத் தலைவர்களும் சிவாலயப் பணிவிடை, சிவனடியாரைப் போற்றுதல், சைவ நூல்களைப் பாதுகாத்தல், சைவ கலாசாலைகளமைத்தல், சைவ மாணவரை ஓம்புதல், கதியற்ற வறியவர்களுக்குக் கைகொடுத்துதவுதல் முதலிய சிவபுண்ணியங்களுக்குப் பயன் படுத்தி அழியாப் பெரும் புகழும் பேரின்பப் பெருவாழ்வும் அடைவார்களாக.

'பேர் கொண்ட பார்ப்பான் பிரான்றன்னை அர்ச்சிக்கில்
போர் கொண்ட வேந்தர்க்குப் பொல்லா வியாதியாம்
பார் கொண்ட நாட்டிற்குப் பஞ்சமுமாமென்றே
சீர் கொண்ட நந்தி தெரிந் துரைத்தானே'

என்ற திருமூலர் திருவாக்கை உற்றுநோக்குக

## திருமண நன்கொடை.

பூவாளூர் திரு. நா. சு. மு. செல்வக்கணபதி செட்டியார் அவர்களுக்கு 9—7—26 தேதி அம்பா சமுத்திரத்தில் திருமண விழா வெகு சிறப்புடன் நிறைவேறியது. இத்திருமணத்தின் பொருட்டு உறையூர் திரு. ச. ப. சி. பரமசிவம் செட்டியார் மூலமாக நன்கொடை அனுப்பப்பட்ட ரூபாய் மூன்றும் வரப்பெற்றோம். மணமகனும் மணமகளும் நீடூழி வாழ எல்லாம் வல்ல பராசக்தியை இறைஞ்சுவாம்.

## விருதுநகர் க்ஷத்திரியப் பெண்பாடசாலை.

விருதுநகர் க்ஷத்திரிய பெண்பாடசாலையின் பதினோராவது வருஷப் பூர்த்திக் கொண்டாட்டமும், பரிசளிப்பு வைபவமும் நாளது அக்ஷய-௵ ஆடி-௴ 18-௳ (2-8-26) திங்கட்கிழமை மாலை 4-30 மணிக்கு பாடசாலை ஹாலில் மதுரை ரேஞ்சு சப் அஸிஸ்டெண்டு இன்ஸ்பெக்டரஸ் ஸ்ரீமதி மிஸ் K. கோபால அய்யர் B. A. L. T. அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் நடைபெறும் என்று காரியதரிசி திரு. பெ. சி. சிதம்பர நாடார் எழுதுகிறார்.

## ஜீர்ணாமிர்தம்.

தங்கம் சேர்ந்த ருசிகர ராஜ ஔஷதம்.

அஜீர்ணத்தையும், மலச் சிக்கலையும் நன்கு கண்டித்து நல்ல பசியையும் ஜீர்ண சக்தியையும் தரும். தேகம் வலுப்படும். பித்தம், இருமல் வயிற்றுப் பிசம், குத்தல், மூலம் பீனிசம், மார்பெரிச்சல், காசம், புளியேப்பம், ஜ்வரகாசங்கள் முதலியவற்றை உடனே குணப்படுத்தி விடும். நல்ல ரத்த விருத்தியையும் தேக புஷ்டியையும் தரும். டின் 1-க்கு ரூ. 1. டின் 2-வரை வி. பி. அணா 5.

பிரஜாநுகூல ஔஷதாலயம், ஸ்ரீரங்கம்.

# சங்கராசாரியர்

## லோக குருவா?

### சைவ சமயிகளுக்கு ஓர் எச்சரிக்கை

(நெல்லை திருநெறித் தொண்டர் குழாத்தினரின் வெளியீடு)

சங்கராசாரியர் என்பவர் சுமார்த்தப் பிராமண சந்நியாசியாய் சிருங்ககிரி, கும்பகோணம் முதலிய சில இடங்களிலே உள்ள சுமார்த்த மடத்திற்குத் தலைவராய் சுமார்த்த மதப்படி தெய்வங்களுக்குப் பூசை செய்து கொண்டிருக்கின்றவர். இவர் ஒருவருக்கும் மதசம்பந்தமான தீட்சை செய்வதில்லை. சைவ மடங்களிலே சிவதீட்சை செய்வது போலவும், வைணவ மடங்களிலே முத்திராதாரணஞ் செய்வது போலவும், மாத்துவ மடங்களிலே உபதேசஞ் செய்வதுபோலவும், சுமார்த்தருக்கு சமயப் பிரவேசத்தைக் காட்டும் ஒரு கிரியையும் ஒரு உபதேசமும் சங்கராசாரியர் செய்வதாகத் தெரியவில்லை. ஒரு மதத்தின் முக்கியமான உபதேசத்தைச் செய்கின்றவர் 'குரு' எனப்படுவர். உபதேசம் பெறுகின்றவர் 'சிஷ்யர்' எனப்படுவர். சுமார்த்த மதத்தில் ஒவ்வொரு பிராமணனுக்கும் அவரவர் தகப்பனுரே காயத்திரி உபதேசஞ் செய்கிறதாகத் தெரிகிறது. பூணூல் அணிதலே சுமார்த்த சமயப்பிரவேசக் கிரியை. 'இவற்றிற்கும் சங்கராசாரியருக்கும் எவ்வித சம்பந்தமுமில்லை. ஆனால் சங்கராசாரியர் மடமும் அதன் சொத்துக்களும் சுமார்த்த மதக் [illegible] இந்திய நாட்டிலே விளங்குகின்ற சைவ சமயம், வைணவ சமயம், மாத்துவ சமயம், புத்தசமயம், சமண சமயம் முதலிய பலசமயங்களுக்கும் ஆசிரியரும் சீடரும் உபதேசங்களும் வெவ்வேறே. இவற்றிற்கும் சங்கராசாரியருக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை. இப்படியிருக்க விபூதி யணிகிற ஒரு காரணத்தை மாத்திரம் வைத்துக்கொண்டு சைவர்களிற் சிலர் சங்கராசாரியரை சைவ மதத்திற்கு உரியவர் என்று பிழைபட எண்ணி அவருக்குத் தங்கள் பொருளை வீணாகச் செலவழித்து ஏமாந்து போகின்றனர். சுமார்த்தர்கள் அவரை 'லோக குரு' என்று சொல்வது கிறிஸ்துவர்கள் தங்கள் குருவாகிய கிறிஸ்துவை உலகத்திற்கு குருவென்று சொல்வதுபோல் ஆகும். ஒவ்வொரு மதத்தரும் தத்தம் குருமார்களை அபிமானம் பற்றி 'லோக குரு' என்று சொல்வது உபசாரமே யன்றி உண்மையல்ல. சுமார்த்த மத மடத்திற்குத் தலைவராகிய சங்கராசாரியர் மத உபதேசம் பண்ணுகிற சுமார்த்த குருவுமல்ல, எல்லாச் சமயங்களுக்கும் எல்லாச் சாதியாருக்கும் உள்ள லோக குருவுமல்ல. அப்படிப்பட்ட லோக குருவே உலகத்திற்கிடையாது. ஒரு மதத்திற்குரிய ஒரு ஆசாரியரை லோக குருவென்று சொல்லுதல் 'ஆகாயத்திலே பூவும், முயலுக்குக் கொம்பும் உண்டு' என்பது போலாகும். லோக குரு வென்ற வார்த்தைக்கு ஒரு வகையிலும் சங்கராசாரியர் உரியரல்லாதிருப்பதும் 'லோக குரு' என்ற சத்தத்தினலே சுமார்த்தர்கள் அவரை எடுத்துக் கூறுவதற்குக் காரணம் என்னவென்றால் இந்த நாட்டிலே தத்தம் சமய உண்மை தெரியாத ஜனங்களை யெல்லாம் தந்திரமாய்ச் சங்கராசாரியருக்குப் பாத காணிக்கை வைக்கும்படி செய்து சுமார்த்த பிராமணருக்குப் போஜனமும், பரிசுகளும், மற்ற வசதிகளும் ஏற்படுத்திக்கொள்வதற்கேயாம். இந்த உண்மையை சைவ சமயத்திற் சேர்ந்த எல்லா வகுப்பினர்களும் நன்றாகக் கவனிக்கக் கடவர்கள். விபூதி தரிக்கிற ஒரே காரணத்தால் சுமார்த்த மத சங்கராசாரியரைத் தங்கள் குருவென்று சைவசமயிகள் மயங்கக்கூடாது. சைவ சமயத்திற்கு முக்கிய சமயப்பிரவேச கிரியையாய்ச் சிவாகமங்களிலே சொல்லப்பட்ட சிவ தீட்சை சங்கராசாரியருக்குக் கிடையாது. சைவாகமக் கருத்தின்படி அவர் அதீட்சதரைக் குருவாக வணங்குதல் சைவ சமயத்திற்கு முற்றும் விரோதமான பெருந் தவறு. சங்கராசாரியார் சமய தீட்சை விசேடதீட்சை, நிருவாண தீட்சை, ஆசாரியாபிஷேகம் இவற்றில் ஒன்றும் பெறாதவராதலினலே அவரிடத்தில் சைவர்களுக்கு உபதேசம் பண்ணுவதற்குரிய யோக்கியதையில்லை. ஆதலால் சைவர்கள் அவரைக் குருவென்று கொள்ளுதல் பெருங்குற்றமாகும். சிவாகம விதிப்படி ஆசாரியாபிஷேகம் பெற்ற சுமார்த்தனுங்கூட சிவாலயங்களிலே சிவார்ச்சனை செய்தற்கு அருகனல்லன். அப்படியிருக்க சிவசமஸ்காரம் ஒன்றும் பெறாத அதீட்சதராகிய சங்கராசாரியர் சிவாலயத்திலே யாதொரு விதமான சமயக் கிரியைகள் செய்தற்கும் தகுதியுடையரல்லர் என்பதைச் சொல்லவும் வேண்டுமா? இதுவுந் தவிர சங்கராசாரியர் ஆன்மாக்களே கடவுள் என்று சொல்லுகின்றவர். பதி, பசு, பாசம், என்னும் முப்பொருள்கள் எக்காலத்தும் உள்ளனவென்றும், கடவுளும் ஆன்மாவும் வேறு என்றும், கடவுள் ஆண்டவன் என்றும், ஆன்மாக்கள் அடிமைகள் என்றும் கூறுகின்ற சைவசமய (சைவசித்தாந்த)க் கொள்கைக்கு நேர் விரோதமான கருத்துக்களை அவர் மேற்கொண்டவர். சைவ சித்தாந்தக் கொள்கைகள் தாழ்ந்த கொள்கை யென்றும், தாங்களே கடவுள் என்று சொல்லும் ஏகாத்மவாதக் கொள்கையே உயர்ந்த கொள்கை யென்றும் பேசி சைவசமயத்தை இழிவு படுத்துகின்றவர். அவர் செய்வது சிவபூசையல்ல. மும்மூர்த்திகளிலொருவராகிய உருத்திரனையே வழிபடுகின்றனர். மும்மூர்த்திகளையுஞ் சமமாகக் கூறுகின்றவர். சைவசமயத்திலே மும்மூர்த்திகளும் ஆன்மாக்களென்று சொல்லியிருக்க அவர்களையெல்லாம் கடவுளின் மூர்த்தங்களென்று கூறுகின்றவர். சைவத்திற்கும் சுமார்த்தத்திற்கும் உள்ள வித்தியாசத்தை அறியாது சங்கராசாரியர் விபூதி தரிக்கிறது பற்றி நம்மவர்கள் இரண்டும் ஒன்றென்று கருதுதல் தவறு. காடன், மாடன் என்னும் தெய்வங்களை வழிபடுகிறவர்களும் தத்தம் சமய அடையாளமாக விபூதியையே உபயோகப் படுத்துகின்றார்கள். சங்கராசாரியர் எல்லாச் சமயத்தாருக்கும் எல்லாச் சாதியாருக்கும் குருவென்றால் அவர் எல்லாரோடும் அளவளாவிப் பிச்சை ஏற்றுக்கொள்ளுதல் உண்டா? பிராமணரல்லாதாரிடம் பேசுவதுகூடத் தீட்டு என்று சங்கராசாரியர் எண்ணுவதெப்படி? பிராமணரல்லாதாரோடு பேச வேண்டுமானல் ஒரு சாஸ்திரியை உடன் வைத்துக்கொண்டு சாஸ்திரியிடத்திற் பேசுவதுபோலத் தங்கருத்தைத் தெரிவிப்பதுஏதனால்? உடன் உண்ணமற் போனலும் எல்லாச் சாதியாருக்கும் சோறு போடுகின்றாரா? எல்லாருக்கும் நேரே உபதேசம் பண்ணுகின்றாரா? அப்படிச்செய்ய எண்ணினாலும் எல்லா மதத்தாருக்கும் பொதுவாக என்ன உபதேசம் செய்ய முடியும்?

இவற்றையெல்லாம் உய்த்துணராத சைவர்கள் தங்கள் சமயம் இன்னதென்றறியாதவர்களாவார்கள். ஆதலால் உண்மைச் சைவசமயிகள் யாவரும் தாம் வருந்தித் தேடிய பொருளை சுமார்த்த மத குருவாகிய சங்கராசாரியர் காலிலே காணிக்கையாகக் கொட்டி வறியவர்கள் ஆகாமலிருப்பார்களாக.

சைவ மடாதிபதிகள் சைவ சமய வளர்ச்சிக் குரிய பொருள்களை அந்நிய மதத்தினர் பொருட்டுச் செலவழித்துப் பழியையும் பாவத்தையும் தேடாதிருப்பார்களாக. நமது

(இதன் தொடர்பை 6-ம் பக்கம் பார்க்க.)


---

ஏமாந்து விடாதீர்கள்! ஏமாந்துவிடாதீர்கள்!!

## சைவ சமயிகளுக்கு

### ஓர் எச்சரிக்கை.

சில தினங்களில் சுமார்த்த மத குருவாகிய சங்கராசாரியர் வரப்போகிறார். சைவ சமயிகள் அவர் அணிந்திருக்கிற விபூதி, உருத்திராக்கத்தைப் பார்த்தும், சுமார்த்தப் பிராமணர்கள் சைவர்கள் பணத்தைத் தங்கள் வகையினர்க்குப் பயன் படுத்தும் பொருட்டுத் தங்கள் குருவை உலகத்தினர்க்கெல்லாம் குருவென்ற முறையில் 'லோககுரு' வென்று கூறும் தந்திர வார்த்தையில் நம்மவர்கள் மயங்கி அவருக்கு வந்தன வழிபாடு, பாத காணிக்கை முதலியன செய்து பாவத்தை ஏற்றுப் பொருளிழந்து வறியவர்களாகாமலிருப்பார்களாக. நம்மவர்களுக்கு உண்மை நெறியை உணர்த்த எல்லாம் வல்ல இறைவன் திருவருளை வழுத்துகிறோம்.



அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவற்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சகம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே


குடி அரசு.

அக்ஷய-ஞு ஆடி-மீ 17 உ


# சென்னையில் கர்மபலன்.

—:o:—

கர்மபலன் என்றால் மனிதர் தங்கள் வாழ்நாளில் செய்யும் காரியங்களுக்கும் பேசும் விஷயங்களுக்கும் நினைக்கும் எண்ணங்களுக்கும் தக்க பலனை அவரவர் இறந்த பிறகு "மேல் லோகத்தில்" கடவுள் முன்னிலையில் அனுபவிப்பதென்றும், அந்த அனுபவம் மோக்ஷம் நரகம் என்கிற இடங்களில் என்றும், சில சமயங்களில் அதற்கு மீறி அடுத்த ஜென்மம் எடுத்து அதில் அனுபவிக்க வேண்டும் என்றும், மனிதன் அதற்குத் தப்பித்துக் கொள்ள வேண்டுமானால் பார்ப்பனர்களுக்குப் பணம் கொடுத்து அவர்கள் சொல்லுகிறபடி கேட்டால் தப்பித்துக் கொள்ளலாம் என்றும், நமது பார்ப்பனர்கள் அனேக ஆதாரங்கள் எழுதி வைத்துக்கொண்டு தங்கள் பிழைப்புக்கு அதையும் ஒரு வழியாக உபயோகித்து வருகிறார்கள்.

ஆனால், நாம் கர்மபலன் என்பதை அவ்விதத்தில் பொருள் கொள்வதில்லை. கர்மபலன் என்றால் வேலையின் கூலி யென்று தான் நினைக்கிறோம். கர்மம் என்றால் வேலை, பலன் என்றால் அதனால் நாமடையும் பிரதிப்பிரயோஜனம்; இதை நாம் கூலியென்று சொல்லுகிறோம். அந்தக் கூலியை மேல் லோகத்தில் பெறுவதென்பதும், அங்கு பட்டு மெத்தை, கட்டில், நாற்காலி, பங்கா, அழகிய பெண்கள் முதலிய சுகானந்தமடையத் தக்கதான ஒரு இடம் மோக்ஷம் என்று இருக்கிறதாகவோ அல்லது கல், முள், தேள், பாம்பு, மலம், புழு முதலிய கஷ்டமனுபவிக்கத் தக்க சாதனங்களோடு நரகம் என்று ஒரு ஸ்தானமிருக்கிறதாகவோ புத்தியிருக்கிறவர்களும் பார்ப்பனர் மாய்கையில் சிக்காதவர்களும் கொஞ்சமும் நினைக்கமாட்டார்கள். ஆனால் கர்ம பலன் என்பதற்கு நாம் எப்படிப் பொருள் கொள்ளுகிறோமென்றால் நாம் எண்ணிய-பேசிய செய்த நமது எண்ணம்-பேச்சு-காரியம் ஆகிய இவற்றின் பலன்களை நாமே நேரில், இந்த உலகத்திலேயே நேருக்கு நேராய், அனுபவிக்கிறோம் என்பது தான். இந்த முடிவைக் கொண்டே இன்று "சென்னையில் கர்ம பலன்" என்கிற தலையங்கம் கொண்டு எழுதத்தொடங்கினோம்.

சென்னையில் நமது பார்ப்பனர் மகாத்மாவின் பெயரைக் கொண்டும், தேசத்திற்காக உண்மையில் தியாகம் செய்தும் ஜெயிலுக்கு போயும் கஷ்டப்பட்டவர்களின் பெயரைக் கொண்டும், காங்கிரஸ் என்கிற பொய்மான் பெயரைக் கொண்டும், சுயராஜ்யம் என்கிற மாய்கையைக் கொண்டும், தமிழ் மக்களை ஏமாற்றி தாங்கள் ஆதிக்கம் பெற பலவித சூழ்ச்சிகள் செய்து வந்தார்கள்—வருகிறார்கள்—வரப்போகிறார்கள் என்பது நாடறிந்த விஷயம். இதற்காக அவர்கள் இந்த இரண்டு மூன்று வருஷங்களாய் எண்ணிய கெட்ட எண்ணங்களும் பேசிய பொய் வார்த்தைகளும் புன்மொழிகளும் செய்த அக்கிரமங்களும் ஒரு அளவுக்கடங்கியதல்ல. உதாரணமாக தாங்கள் காங்கிரஸ் சீட்டர்களென்றும் தங்களுக்குக் கொடுக்கும் ஓட்டு மகாத்மா காந்திக்கு கொடுப்பதென்றும் பார்ப்பனரல்லாத கக்ஷிக்காரரான ஜஸ்டிஸ் கக்ஷியாருக்குக் கொடுக்கும் ஓட்டுகள் தேசத்துரோகிகளுக்கும் சுய நலக்காரர்களுக்கும் கொடுக்கும் ஓட்டென்றும் சொன்ன தோடல்லாமல், பார்ப்பனரல்லாத கக்ஷியார் கூட்டும் கூட்டங்களில் காலிகளை விட்டு கல்லெறியச் சொல்லுவதும் கூட்டத்தைக் கலைக்கச் செய்வதும், பார்ப்பனரல்லாதார் கட்சித் தலைவர்களை அவர்கள் வீட்டுக்கு முன்னால் நின்று கொண்டு யோக்கியப் பொறுப்பில்லாமல் துர்பாஷையால் திட்டச் சொல்வதும் பார்ப்பனரல்லாத தேசபக்தர்களான ஆரியா முதலியவர்களை ஆட்களை விட்டு அடிக்கச் சொல்வதும் தேர்தல் சமயங்களில் தேர்தல் ஸ்தானங்களில் பெரிய மனிதர்களையும் ஸ்திரீகளையும் துர்பாஷையாகப் பேசியும் காலித்தனமாய் நடந்தும் பல காரியங்களைச் செய்த விஷயம் சென்ற சென்னை முனிசிபல் தேர்தல் சம்பந்தமாய் நியாய ஸ்தலத்திற்கு சென்ற பல வியவகாரங்களிலிருந்தும் அவை உண்மைதானா அல்லவா என்பதை கடைசி வியவகாரமாகிய ஸ்ரீமான் ஆரியா அவர்களை அடித்ததாக ஏற்பட்ட வியவகாரம் முடிந்த விதத்திலிருந்தும் அறிந்திருக்கலாம்.

தேர்தல்கள்தான் இப்படி என்றால் தேர்தல்களுக்கு முன்பாக ஒத்துழையாமை இருந்த காலத்திலும் சக்ரவர்த்தித் திருமகனார் சென்னைக்கு வந்த காலத்தில் அவரைப் பார்க்கச் சென்ற பார்ப்பனரல்லாத தலைவர்களைத் திட்டியும் அடித்தும் துன்புறுத்திய தோடல்லாமல் அவர்கள் ஏறிச்சென்ற மோட்டார் வண்டி முதலியவாகனங்களின் மேல் கல் எறிந்து காயப்படுத்தியும் சேதப்படுத்தியும் அவர்களை ஓடி ஒழியும்படி செய்ததையும் பார்ப்பனரல்லாதாரின் மாபெருந் தலைவரான சர். பி. தியாகராய பெருமானின் வீட்டுக்குக் கூட சில காலிகளை விட்டு, அவர் வீட்டு ஜன்னல் கதவு கண்ணாடி முதலியவைகளை உடைத்தும் அவரைக் கொல்ல ஏற்பாடு செய்தும் அவர் பதினியார் வந்து இக்காலிகளின் காலில் விழுந்து தனக்கு மாங்கல்லியப் பிச்சை கொடுக்க வேண்டுமென்று கெஞ்சிக் கேட்டும் அப்பாவிகளுக்கு மனமிளகாமல் துர்பாஷையாய் அவ்வம்மையாரைத் திட்டி உள்ளே நுழையப் பிரயத்தனப்பட்டும் அங்குள்ளவர்கள் அப் பெரியாரை ஒழியச் செய்யும்படியான அவ்வளவு அக்கிரமங்கள் செய்யச் செய்ததையும், சென்ற வாரத்திலும் பார்ப்பனரல்லாத தலைவரான காலஞ்சென்ற டாக்டர் நாயர் பெருமான் ஞாபக தினத்தைக் கொண்டாடும் முக்கிய சம்பவமான ஒரு பெரிய கூட்டத்தில் கலகம் செய்யச் செய்தும் . பார்ப்பனரல்லாத தேச பக்தர்கள் தலைமீது கல் போட்டு காயப்படுத்தியும் கூட்டத்தைக்கலைக்கச் சூழ்ச்சி செய்தும் மற்றும் எவ்வளவோ கொடுமைகள் செய்ததையும் உலக மறிந்திருக்கும். இப் பார்ப்பனர்கள் செய்வித்த இவ்வித அக்கிரமங்களைத் தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டியும் மகாத்மா காந்தியும் முறையே தீர்மான மூலமாகவும் "எங் இந்தியா" பத்திரிகை மூலமாகவும் கண்டித்திருப்பதும் உலக மறிந்த விஷயம். இவைகள் மாத்திரமல்லாமல் வெளியூர்களிலும் கூலிக்கு ஆட்களை அமர்த்தி ஆங்காங்குள்ள பார்ப்பனரல்லாத தலைவர்களையும் பெரிய மனிதர்களையும் திட்டுவதற்கு ஏவி விடுவதும் அவர்கள் பேரில் பொய்யும் புழுகும் சொல்லச் செய்து கலகமுண்டாக்குவதுமான பல கொடுமைகளைச் செய்து வருவதும், தங்கள் கைவசம் உள்ள பத்திரிகைகளைக் கொண்டு பார்ப்பனரல்லாதாருக்கும் அவர்களுடைய கட்சிக்கும் அக்கட்சித் தலைவர்களுக்கும் நமது பார்ப்பனர் செய்து வரும் கொடுமைகளும் அளவிடக் கூடியதல்ல.

இவ்வளவு கஷ்டங்களையும் கொடுமைகளையும் அபாயங்களையும் சகித்துக் கொண்டு பார்ப்பனரல்லாதார் சும்மாயிருப்பதாயிருந்தாலும் வேலை செய்தவன் கூலி பெறாமல் போக இயற்கை தேவி சம்மதிப்பாளா? ஒரு சமயம் இயற்கை தேவி சம்மதித்தாலும் உலகம் பொறுக்குமா? ஒருக்காலும் பொறுக்காது. ஆகையால் உண்மையான கூலி அடையாவிட்டாலும் அடையக் கூடிய நிலைமையிலாவது இருக்கிறார்கள் என்று சொல்லிக் கொள்ளப்படுகிறது. அதுமல்லாமல் வேலை செய்தவர்களே கூலி அடைகிறோம் என்றுவது சொல்லிக் கொள்ளத் தக்க சம்பவம் ஏற்படுகிறது. உதாரணமாக "சுதேசமித்திரன்" என்னும் பார்ப்பன மித்திரன் பத்திராதிபரான ஸ்ரீமான் ஏ. ரெங்கசாமி அய்யங்கார் ஒரு கூட்டத்தில் பேசும் போது அவர் பேசிய பொய்க் கூற்றை வெளிப்படுத்த சிலர் அவரைக் கேள்வி கேட்டதாகவும் அதற்கு ஸ்ரீமான் அய்யங்கார் பதில் சொல்லாமல் போலீஸ் இன்ஸ்பெக்டரைக் கூப்பிட்டு "இதோ, கேள்வி கேள்கிறானே, அவனை அரஸ்ட்டு செய்" என்று கட்டளை இட்டதாகவும், அந்த இன்ஸ்பெக்டர் "அவர்கள் கலகம் செய்தால் அரஸ்ட் செய்யலாம், நீர் பேசியதிலிருக்கும் புரட்டுகளை வெளியாக்க வேண்டும் என்கிற நல்ல எண்ணங்கொண்டும் பொது ஜன நன்மையை உத்தேசித்தும் கேள்வி கேட்டால் அதற்காக எப்படி அரஸ்டு செய்வது?" என்று கேட்டதாகவும், அதன் பேரில் ஸ்ரீமான் அய்யங்கார் வெட்கித் தலைகுனிந்ததாகவும், பிறகு தங்களது வஜ்ராயுத

மாகிய பத்திரிகையில் போலீஸாரைப் பற்றி தூஷித்தெழுதி வருவதாகவும் சொல்லப்படுகிறது. பிறகு ஸ்ரீமான் எம். கே. ஆச்சாரியார் ஒரு கூட்டத்தில் பேசும்போது "காங்கிரசில் இப்போது காந்தியிருக்கிறாரா?" வென்று ஒருவர் கேட்க அவரைக் (கேட்டவரை) காலியென்று சொல்லிப் பார்ப்பனரல்லாதார் கட்சியை தூஷித்ததாகவும், அதுசமயம் பக்கத்திலிருந்த ஒருவர் காலியென்று சொன்னதையும் தூஷித்த கெட்டவார்த்தையையும் வாபீசு வாங்கிக் கொள்ளும்படி கேட்டதாகவும், அதற்கு ஸ்ரீமான் ஆச்சாரியார் சம்மதிக்காமல் மேலும் மேலும் அப்படியே பேசினதாகவும், இந்தவார்த்தைகளைப் பின்வாங்கிக் கொள்ளும்படி தன்பக்கத்தில் வந்து சொல்லச் சொன்ன ஆளைப்பிடித்து ஸ்ரீமான் ஆச்சாரியார் தள்ளியதாகவும், அந்த ஆள் ஆச்சாரின் தாடியைப் பிடித்து ஆட்டினதாகவும் சொல்லிக் கொள்ளப்படுகிறது. ஸ்ரீமான்கள் எம். கே. ஆச்சாரியாருக்கும், அ. ரெங்கசாமி அய்யங்காருக்கும் ஏற்பட்ட இச்சம்பவத்தைக் குறித்து நாம்வருந்துகிறோம். கூட்டங்களில் இம்மாதிரி நடந்து கொண்டவர்களையும் நாம் அழுத்தமாகக் கண்டிக்கிறோம். ஆனால் நமது வருத்தமும் நமது கண்டிப்பும் ஒரு மனிதன் தான் செய்த கருமத்திற்காக அனுபவிக்கும் பலனைத் தடுக்க முடியுமா வென்பது நமக்குச் சந்தேகமாகத்தானிருக்கிறது.

ஆனாலும் ஸ்ரீமான் எம். கே. ஆச்சாரியார் போன்றவர்கள் பார்ப்பனரல்லாதார் உள்ள பொதுக் கூட்டங்களில் நின்று பேசுவது கொஞ்சமும் சரியல்லவென்பதுதான் நமது அபிப்பிராயம். அப்படிப் பேசுகிற கூட்டங்களில் கலகம் நடப்பது நியாய விரோதமானாலும் சுபாவத்திற்கு விரோதமென்று சொல்ல வழியில்லை. ஏனெனில் "ஒரு பார்ப்பனக் குழந்தை சாப்பிடுவதை ஒருபார்ப்பனரல்லாத குழந்தை ஒருவேளை பார்த்துவிட்டால் நான் பதினைந்து நாள் பட்டினி கிடப்பேன்" என்று சொன்னவரும், "பிறப்பில் பார்ப்பனனும் சூத்திரனும் சமம் என்று சொன்னால் நான் காங்கிரசிலேயே இருக்கமாட்டேன்" என்று சொல்லிக் காங்கிரசை விட்டு வெளியில் போனவரும், கல்பாத்தி ரோட்டில் பார்ப்பனரல்லாதாரை நடக்க விடும்படி கொண்டு வந்த தீர்மானத்தை எதிர்த்துப் பேசியவருமான நமது எம். கே. ஆச்சாரியார் எந்த முகத்தைக்கொண்டு பார்ப்பனரல்லாதார் கூடியுள்ள கூட்டங்களில் பேசத்துணிகிறார் என்பதும் எந்த முறையில், பார்ப்பனரல்லாதார் ஓட்டுகளை தனக்குப்போடும்படி கேட்கிறாரென்பதும் நமக்கு விளங்கவில்லை. அதோடுகூட பார்ப்பனரல்லாதாரில் பலர் ஸ்ரீமான் எம். கே. ஆச்சாரியார் பின் சென்று ஆச்சாரியாருக்கு ஓட்டு வாங்கிக்கொடுக்க எப்படி சம்மதிக்கிறார்கள் என்பதும் நமக்கு விளங்கவில்லை. பார்ப்பனரல்லாதார் பார்த்த ஆகாரம் சாப்பிடுவதுமாத்திரம் பெரிய தோஷமானால், அவர்கள் ஓட்டுக்களை வாங்கிப் பதவி பெற்றுப் பணம் சம்பாதித்து வயிறு வளர்ப்பது மாத்திரம் நமது பார்ப்பனர்களுக்கு மோக்ஷம் போலும்.

இம்மாதிரியான அக்கிரமங்களின் பலனையும் சூழ்ச்சிகளின் பலனையும் ஒரு மனிதன் அனுபவிக்க முடியாமல் செய்ய வேண்டுமென்று ஒருவன் எண்ணுவானேயானால், அது சூரியன் உதிக்கக் கூடாது என்று சொல்லுவது போல்தான் முடியும். ஆனாலும் பொதுவாய் பார்ப்பனரல்லாதாருக்கும் பார்ப்பனரல்லாதார் சமூகத்திற்குப் பாடுபடுவதாய்ச் சொல்லும் அன்பர்களுக்கும் நாம் ஒரு விண்ணப்பம் செய்து கொள்ளுகிறோம். அதாவது எந்தக்காரணத்தைக்கொண்டும் எவ்வளவு கோபமூட்டப்பட்டாலும், கூட்டங்களில் ஒருவரை ஒருவர் திட்டுவதோ கலவரம் செய்வதோ அடிதடி ஏற்படும்படி நடந்து கொள்வதோ பார்ப்பனரல்லாத சமூகத்திற்கே கஷ்டமும் அவமானமும் கெட்ட பெயரைத் தரத்தக்கது என்றே சொல்லுவோம்.

முதலாவது இம்மாதிரி செய்யும் காரியமே மிகவும் இழிவானது. அல்லாமலும் "முள்ளு வாழையிலையின்மேல் பட்டாலும் வாழை யிலை முள்ளின்மேல் பட்டாலும், இலைக்குத்தான் கெடுதியே தவிர, முள்ளுக்கு ஒரு கெடுதியுமில்லை" என்று ஒரு பழமொழியுண்டு. அதுபோல் பார்ப்பனர் கட்சிக்காரர் பார்ப்பனரல்லாதார் கட்சிக்காரரை அடித்தாலும் திட்டினாலும், பார்ப்பனரல்லாத கட்சிக்காரர் பார்ப்பனக் கட்சிக்காரரை அடித்தாலும் திட்டினாலும் பார்ப்பனரல்லாதாருக்குத்தான் கஷ்டமும் அவமானமும் ஏற்படுகிறது. எப்படியென்றால் இரண்டு கட்சியிலும் சண்டை பிடித்துக்கொள்ளும் போதும், அடிதடி செய்துகொள்ளும் போதும் பார்ப்பன ரல்லாதார்களாகவே இருக்கிறார்கள். உதாரணமாகப் பார்ப்பனக் கட்சிக்காரர்களின் சார்பாய்ப் பார்ப்பனரல்லாதாரைத் திட்டுவதற்கு நமது பார்ப்பனர் பார்ப்பனரல்லாதாராகப் பார்த்தே ஏவி விடுகிறார்கள். உதாரணமாக இப்போது பார்ப்பன ரல்லாதார்களைத் திட்டுபவர்கள் யாரென்று பார்த்தால் ஸ்ரீமான்கள் பாவலர், மயிலை ஜபவேலர், மயிலை ரத்தினசபாபதி முதலியார், குப்புசாமி முதலியார், அண்ணாமலைப் பிள்ளை, சுப்பிரமணிய நாயக்கர் ஜனாப்கள் ஷாபி மகமது, அப்துல் ஹமீத்கான் என்கிற கனவான்களாகவே இருக்கிறார்களே யொழிய வேறில்லை. இவர்கள் பார்ப்பனரல்லாதாராயிருந்தும் இவர்கள் திட்டுவதும் அடிப்பதும் பார்ப்பனரல்லாதாரையே தான். இதற்குத் திருப்பி திட்டுவதாயிருந்தாலும், அடிப்பதாயிருந்தாலும் இவர்களைத் தான் திட்டவும் அடிக்கவும் நேருமே யல்லாமல் பார்ப்பனர்கள் சுலபத்தில் சிக்கிக் கொள்ள மாட்டார்கள். எப்படியாவது நமது கையைக்கொண்டே நமது கண்ணைக் குத்துவார்கள். ஆதலால் எந்த வகையிலும் நமக்குத்தான் கஷ்டம். நியாயமும் சத்தியமும் நம்முடைய பங்கில் இருப்பதனால் நமக்குத் திட்டும்வேலையும் அடிக்கும் வேலையும் கண்டிப்பாய்க் கூடாதென்றே சொல்லுவோம். தவிரவும் நமது காரியங்கள் ஒவ்வொன்றிலும் பாமர பொது ஜனங்களைக் கொண்டே செய்ய வேண்டியதாகையால் நாம் பொது ஜனங்களின் அன்பையும் ஆதரவையும் பெறவேண்டியது முக்கியமான காரியம். அடிதடி சம்பவம் யாரால் ஏற்பட்டாலும் நமக்குத்தான் கெட்ட பெயரென்பதையும் நமக்குத்தான் நஷ்டமென்பதையும் வற்புறுத்திக் கூறுகிறோம்.

## நமது தனிப்பெரும் விண்ணப்பம்.

சென்ற "குடி அரசு" இதழில் திரு. ஈ. வெ. இராமசாமி நாயக்கரவர்கள் பார்ப்பனரல்லாதாருக்கு விடுத்த வேண்டுகோளை அன்பர்கள் கண்ணுற்றிருக்கலாம். தற்காலம் தமிழ் நாட்டு அரசியல் நிலைமையும் சமூக நிலைமையும் பெரிதும் குழப்பத்தோடிருக்கிறதென்பதை தமிழ் நாட்டவர்களுக்கு நாம் எடுத்துக்கூற வேண்டிய தவசியமில்லை. இத்தகைய குழப்பமான நிலைமையில் அரசியல் துறையையும் சமூக விஷயத்தையும் சத்தியமான, ஒழுங்கான உண்மையான, அமைப்போடும் திட்டத்தோடும் நிலைபெறுத்திச் சீர்பெறச் செய்வான் பொருட்டே திரு. நாயக்கரவர்கள் அவ் வேண்டுகோளை விடுத்தார்.

திரு. நாயக்கரவர்களின் வேண்டுகோளுக்கிணங்கி இதுவரை சுமார் 500-தமிழர்கள் "குடி அரசி"ன் கொள்கையை ஏற்றுக் கொள்வதாகவும் திரு. நாயக்கருள்ளிட்ட பலர் வெளியிடப் போகும் அறிக்கையில் தங்கள் பெயரையும் சேர்த்துக் கொள்ளுமாறும் தங்கள் கையொப்பம் அளித்துள்ளார்கள். இத்தகைய முறையில் அவ்வமைப்பு ஏற்படுத்தி இத்தகைய திட்டங்கோல வேண்டுமென்பதாகவும் ஒத்துழையாமை காங்கிரசில் முன்னின்றுழைத்த பல அறிஞர்கள் நீண்ட கடிதங்கள் எழுதி வருகிறார்கள். தேர்தல் காலம் மிக விரைவாக நெருங்கி வருகிறது. ஆதலால் நமது கொள்கையை ஏற்கும் பார்ப்பனரல்லாத சகோதரர்கள் சிறிதும் காலந் தாழ்த்தாது உடனே தங்களதும் மற்றைய அன்பர்களதும் கையொப்பங்களைப் பொறித்தனுப்ப வேண்டுகிறோம். இன்று நாளை யெனக் காலங் கடத்த இது சமயமன்று. காலச் சக்கரம் அதி விரைவாய்ச் சுழன்று வருகிறது. ஆதலால் உடனே தமிழர்கள் தங்கள் கடமையைச் செய்வார்களாக. நன்றென்பதை இன்றே செய்யுங்கள்.

---

## திரு. நாயக்கர் அவர்கள்.

திரு. ஈ. வெ. இராமசாமி நாயக்கரவர்கள் 24-7-26- தேதி சென்னைக்குச் சென்று அங்கு ஓட்டர்களின் கடமையை எடுத்துச் சொல்லிவருகிறார். 3-8-26- தேதி ஈரோடு திரும்பி வருவார்.

---

### கோயமுத்தூர்

### சட்ட சபை அபேக்ஷகர்களின் ஒற்றுமைக் கூட்டம் உடைந்தது.

பழயகோட்டை ஸ்ரீமான் பட்டக்காரரவர்கள் கோயமுத்தூர் ஜில்லா சட்டசபை அபேக்ஷகர்களான நால்வர்களுக்குள் போட்டியன்னியில் ஒற்றுமை ஏற்படுத்தக் கூட்டிய பஞ்சாயத்துக் கூட்டம் ஒரு ஸ்தானத்திற்கு நால்வர்கள் தவிர இன்னும் இரண்டு அபேக்ஷகர்கள் ஏற்பட்டதினால் ஒற்றுமை உடைந்து போயிற்று. கோயமுத்தூர் ஜில்லா போர்டு பிரசிடெண்டு எலெக்ஷன் 4—8—26-ல் கோயமுத்தூரில் நடைபெறும் என்று நமது நிருபர் எழுதுகிறார்.

## மலர்தலைக்காட்சி.

—:o:—

### வீட்டுக்கவலை என்? * *

வெளியேறிய பாப்பாத்திக்கு வீட்டுக் கவலை என்? இவள் விபசாரி என்று வெளியேறி விட்ட பிறகு தன்னுடைய புருஷனைப்பற்றியும் தன் மாமி நாத்தி நங்கைகளின் மீதும் கவலை செலுத்துவதால் இவளுக்கு ஆகும் பயனென்? அதேபோன்று நாங்கள் உத்தியோகம் ஏற்றுக்கொள்ளமாட்டோம்; 'சாத்தான்' அரசாங்கத்துடன் ஒத்துழைக்கமாட்டோம், திணசத்திணர மூட்டுக்கட்டை போடுவோம் என்று வாய்ப்பறை அறையும் ஐயங்கார் கோஷ்டியின் தண்டாயுதமாகிய "சுதேசமித்திர" னுக்கு உத்தியோகத்திலிருக்கும் எவர் எக்கதியானாலென்ன? காதலனை இழுக்கும் காதலிபோல் எதற்காக ஆற்றொணாத்துயர் உறவேண்டும்?

அரசியல் துறையில் ஓர் பெரிய அமிதவாதியாயிருப்பினும், அரசாங்கத்தை அடி பணிந்து வணங்கும் பெரிய மிதவாதியாயிருப்பினும் ஜாதியினின்று தள்ளப்பட்டவன் என்று சொல்லப்படும் குலக்கேடனாயினும் தங்கள் வகுப்பு விஷயத்தில் மட்டிலும் விட்டுக் கொடுக்கமாட்டார்களென்பதையும் அந்தரங்கமாக ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்ளுகிறார்களென்பதையும் அம்மாதிரி தமிழர்களும் ஆகவேண்டும், தமிழர்களுக்குள் அத்தகைய உணர்ச்சி ஏற்படவேண்டும் எனவும் நாம் எழுதியிருக்கிறோம்.

இப்பொழுது சென்னை சட்ட மெம்பராகயிருக்கும் சர். சி. பி. இராமசாமி ஐயர் ஜினிவாவில் நடக்கும் சர்வதேசச்சங்கத்திற்கு இந்தியாவின் பிரதிநிதிகளில் ஒருவராய் நியமிக்கப்பட்டுள்ளார். இதைப்பற்றி "சுதேசமித்திரன்" ஆற்றொணாத் துயருடன் கவலைப்பட்டு கண்ணீர் சொரிந்து வயிற்றிலும் மார்பிலும் அடித்துக்கொள்ளுகிறான். உண்மையில் "சுதேசமித்திரன்" உத்தியோகம் விரும்பாத கட்சிக்குழைப்போனாயிருந்தால் சர். சி. பி. யை மாற்றி விட்டது பற்றி ஏன் வயிற்றெரிச்சல் கொள்ளவேண்டும்?

### சோழியன் குடுமி * *
### சும்மா ஆடுமா? *

சர். சி. பி. யை ஜினிவாவிற்கு அனுப்பப் போவதால் 'மித்திரன்' வயிற்றெரிச்சல் படுவதில் இரகசியம் அளவுகடந்து செறிந்து கிடக்கிறது. அதாவது "இந்த சமயத்தில் ஸ்ரீமான் ராமசாமி ஐயர் வேறு உத்தியோகத்திற்கு நியமிக்கப் பட்டு விட்டது பொது ஜனங்களுக்கு ஆச்சரியத்தையே விளைவிக்கும்," என்றும், "இச்சமயத்தில் அவரை மாற்றி விட்டதற்குப் பொறுப்புள்ளவர் யாருக்கோ இணங்கி அப்படிச் செய்து விட்டதாக நினைக்க இடமிருக்கிறது. எந்த நிலைமையில் எதன் பொருட்டு இந்தசமயத்தில் மாற்றப் பட்டார் என்று தெரிந்து கொள்ளப் பொது ஜனங்களுக்கு உரிமை உண்டு" என்றும் 'மித்திரன்' எழுதியுள்ளான்.

சர். சி. பி. நாளை மறுதினம் சென்னையினின்றும் ஜினிவா செல்ல புறப்படப் போகிறார். அங்கிருந்து சட்டசபைத் தேர்தல் முடிந்த பிறகு தான் அவர் திரும்பிவர முடியும். தேர்தல் காலத்தில் சுயராஜ்யக் கட்சியெனப் பெயர் தாங்கி நிலவும் பார்ப்பனக் கட்சிக்கு ஏற்றவாறு உதவிசெய்தற்குசர்.சி.பி.உதவிசெய்யமுடியாதநிலைமையில் அவரை இங்கிலாந்துக்கு அனுப்பப் போகிறார்களென்பது பற்றியே 'மித்திரன்' கண்ணீர் சொரிகிறான். அவன் வயிற்றெரிச்சல் பட்டு எழுதியுள்ள விஷயத்தில் "இந்த சமயத்தில்" "இச் சமயத்தில்" என்று குறித்திருப்பதன் கருத்தென்னை? பார்ப்பனக் கட்சிக்குக் கைதூக்கி விடவேண்டிய 'தேர்தல் நடக்கும்' சமயத்தில் சர். சி பி. யை இல்லாமலிருக்கச் செய்வதென்பதேயாகும்.

இவற்றினின்று சர். சி.பி.மறைமுகமாகப் சுயராஜ்யக் கட்சியாருக்கு உதவி செய்து வந்திருக்கிறார் என்பது நன்கு புலனாகும். எனவே சின்னாட்களுக்கு முன் சட்ட சபையில், தேர்தல் இலாகாவை சர். சி. பி. இராமசாமி ஐயரிடமிருந்து வேறு ஒருவருக்கு மாற்றி விடவேண்டுமென திரு. எ. இராமசாமி முதலியார் வாதாடியது நியாயம் என்பது 'சுதேசமித்திரன்' அடையும் துக்கத்தினின்று அறிந்து கொள்ளலாம். ஜஸ்டிஸ் கட்சியை உத்தியோகவேட்டையாடும் கட்சியென அறிவீனமாய் எழுதிவரும் உத்தியோகம் எற்களாசாதென்னும் 'சுதேசமித்திரனி'ன் சங்கை இதனின்று தமிழர்கள் அறிந்து கொள்வார்களாக.

### ஏனோ வயிற்றெரிச்சல்? * *

சுக்ரீவ ஆழ்வார் விபீஷண ஆழ்வார் முதலிய சகோதரத் துரோகிகள் ஸ்ரீ இராமனுக்கு துணையாகவும் துப்பாகவும் இல்லாதிருந்தால் இராமாயணத்தின்முடிவை வேறுவிதமாகவே எழுதப்பட்டிருக்கும். இதேபோன்று பார்ப்பனக்கட்சியில் பார்ப்பனரல்லாத வகுப்பிற் பிறந்த கோடாலிக் காம்புகள் இல்லாதிருந்தால் சுயராஜ்யக் கட்சியின் சாயம் முன்னரே வெளுத்துப் போயிருக்கும். இருபெரும் ஆழ்வார் மூர்த்திகளை முன் வைத்தே ஸ்ரீராமர் இலங்கையைப் பிடித்தார். நமது பார்ப்பனர்களும் நம்முடன் பிறந்து சுக்கிரீவ ஆழ்வார் விபீஷணாழ்வார்களாக மாறிய பதடிகளை முன் வைத்தே எதொரு காரியமும் செய்து வருகின்றனர்.

கார்ப்பரேஷன் விளம்பரங்களை 1926—27-ம் வருடத்தில் பிரசுரம் செய்ய "ஜஸ்டிஸ்" "திராவிடன்" பத்திரிகைகள் கொடுத்த டெண்டர்களை கமிஷனர் அங்கீகரித்து விட்டார். இதனால் பார்ப்பனப் பத்திரிகைகளுக்கு வயிற்றெரிச்சல் வந்துவிட்டது. இவ்விஷயத்தை அம்பலத்துக்குக் கொண்டுவர வேண்டுமென உடனே தங்கள் துவார பாலகர்களான பார்ப்பனரல்லாதார்களைத் தூண்டிவிட்டு கார்ப்பரேஷன் கவுன்சிலில் கேள்வி கேட்கச் சொல்லிவிட்டன.

1925-வரை கார்ப்பரேஷன் விளம்பரங்களைப் பிரசுரித்து அதன் வருமானங்களைப் பார்ப்பனப் பத்திரிகைகளே ஏகபோகமாக அனுபவித்து வந்தன. அதாவது 1920-லிருந்து 1925-வரை "சுதேசமித்திரன்" 6740 ரூபாயும், 1925-ல் மட்டிலும் "இந்து" பத்திரிகை 3202 ரூபாயும் கார்ப்பரேஷன் விளம்பரத்தால் இலாபம் அடைந்தன. இவ்வாறிருக்க 'ஜஸ்டிஸ்' 'திராவிடன்' பத்திரிகைக்கு இந்த ஒரே ஒருதடவை விளம்பரங் கொடுக்க ஏற்பாடு செய்ததையே பொறுக்க முடியாமல் இவ்வாறு வயிற்றெரிச்சல் படும்போது இன்னும் அரசாங்கத்தின் முழு ஆதிக்கமும் பார்ப்பனர்கள் கையிலிருந்தால் மற்றோரின் கதி என்னாகுமென்பதை வாசகர்களே உணர்ந்து கொள்ள விட்டுவிடுகிறோம். 1926-ம் வருடத்தில் கேட்கும் கேள்விக்கு பார்ப்பனர்களின் எடுப்பார்கைப் பிள்ளையான புளுகில் பரிசு பெற்ற கார்ப்பரேஷன் தலைவர் 1924-ம் வருடத்திய பத்திரிகைகளின் சந்தா எண்ணிக்கையைக் கூறினார். ஏனோ 1925-ன் எண்ணிக்கையை மறக்கவேண்டும்?

## நெக்டை என்னும்
## கழுத்துச் சுருக்கு.

மைசூர் அரசாங்கத்து வித்தியா இலாகா அதிகாரி பள்ளிக்கூடச் சிறுவர்கள் ஒவ்வொருவரும் "நெக்டை" 'கழுத்துச் சுருக்கு' மாட்டிக்கொண்டு வரவேண்டுமென்று உத்திரவு போட்டிருக்கிறார்களாம். உத்திரவுப்படி நடக்கிற ஆள்கள் இருந்தும் நாட்டில் உத்திரவு போட எஜமானர்கள் கிடைப்பது கஷ்டமான காரியமல்ல. அதிகாரிகள் எந்த உத்திரவு போட்டாலும் ஜனங்கள் அதை ஏற்றுக்கொண்டுதான் ஆகவேண்டும் என்கிற நிலைமையில் நாம் இருக்கிறோமாதலால் அவ்வுத்திரவைக் கண்டிப்பது வீண் வேலையாகத்தான் முடியும். ஆதலால் உத்திரவின் கொடுமையைப் பற்றிப் பேச மற்றவர்களுக்கு விட்டு விட்டு நெக்டை (கழுத்துச் சுருக்கு) என்றால் என்ன என்பதைப்பற்றி ஆராய்வோம்.

கழுத்துச் சுருக்கானது, ஐரோப்பிய நாகரீகத்தில் ஏற்பட்டது என்று சொன்னாலும் அது கிறிஸ்தவ மதத்தின் அறிகுறி. கிறிஸ்தவ மதத்தினர் தங்கள் கழுத்தில் சிலுவை மாட்டிக்கொள்வதை நாம் பார்த்திருக்கிறோமல்லவா? அதுபோலவே இந்தக் கழுத்துச் சுருக்கும் சிலுவையைக் குறிக்கிறது. அதாவது கீழே தொங்குவது இரண்டும் இரண்டு கால்களாகவும், முடிச்சு தலையாகவும் மார்பாகவும், அதிலிருந்து இரு புறமும் விரியும் மாதிரி இரு கைகளாகவும் கருதி அதை சிலுவைக்குப் பதிலாக உபயோகப் படுத்தப் பட்டு வருகிறது. அதையே இந்துக்களும் முகமதியர்களும் மற்றும் கிறிஸ்துவரல்லாத பல மதத்தினர்களும் அழகு என்றோ நாகரீகமென்றோ! அணிந்து பழகிவிட்டார்கள். இப்போது கிறிஸ்துவ பள்ளிக்கூடங்களில் 'பைபிள்' என்னும் கிறிஸ்துவ வேதம் படிக்கவேண்டியது எவ்வளவு அவசியமோ, கட்டாயமோ அதைவிட கழுத்தில் சிலுவை கட்டுவது அவசியமாகவும் கட்டாயமாகவும் கருதப்படுகிறது. போதாக்குறைக்கு மைசூர் சர்க்காரில் உத்திரவும் போட்டாய் விட்டது.

கூடிய சீக்கிரத்தில் கிறிஸ்து மதத்தில் சேராதவனுக்கு இன்ன தண்டனை அல்லது இன்ன வரி என்று கூடச் சொல்லுவார்கள் என்பதில் சந்தேகமில்லை. மகமதியர் அரசாக்ஷியில் ஒரு கையில் கொரானும் (மகமதிய வேதம்) மற்றொரு கையில் கத்தியும் வைத்துக் கொண்டு இந்துக்களை மிரட்டி மகமதிய மதத்தில் சேர்த்தார்கள் என்று நமது ஐரோப்பியர்கள் பல வழிகளில் கட்டுக்கட்டி விட்டதுண்டு. ஆனால் கத்தியில்லாமல் தடியில்லாமல் துப்பாக்கியில்லாமல் தந்திரத்திலும் சூழ்ச்சியிலும் நமது பார்ப்பனர்களைக் கொண்டும் இப்போது தாராளமாய் இந்துக்களைக் கிறிஸ்தவராக்குவதோடு கிறிஸ்தவராகாதவர்களையும் கிறிஸ்துவச் சின்னமான நெக்டையோடு இருக்க வேண்டுமென்று உத்திரவு போடுவது நமது அடிமைத்தனத்தைக் காட்டுகிறது.

## கோயில்.

இந்து மதத்தினரெனக் கூறப்படும் மக்கள் பலபிரிவும் பல வகுப்பும் பல குலமுமாக எண்ணுதற் கரிய சாதி சாதி யென்று பிளவுண்டு, ஓர் வகுப்பினருடன் மற்றோர் வகுப்பினர் சேராமலும் ஓர் குலத்தினரிடம் மற்றோர் குலத்தினர் உண்ணல் தின்னல் கிடையாமலும் இருந்து வருகின்றனர். எவரிட்டசாபமோ, இன்னும் இந்த இருபதாம் நூற்றாண்டிலும் ஒரே மதத்தினர் என்று கூறிக்கொண்டு இவ்வாறு பல பிரிவினராயிருந்து வருகின்றனர். இத்தகைய பிரிவிற் கெல்லாம் மூலகாரணம், "பனவராம் பெரும்படிறற்றுஞற்றிய கள்ளமாயை" அதாவது சூழ்ச்சியிலேயே ஊறிப்பிறந்த வஞ்சகர்களான பார்ப்பனர்கள் என்னும் இருபிறப்பாளர்கள் ஏற்படுத்திய திருட்டு வித்தியா சத்தத்துவமேயாகு மென்னும் பெரியார் வாக்கினின்று, பார்ப்பனர்களே என்பதை அறிவாளர் எவரும் மறுக்கமாட்டார்கள்.

தமிழ் நாட்டிலேயுள்ள கோயில்களெல்லாம் பண்டைத் தமிழ் வேந்தர்களால் சமரசம் ஒற்றுமை நல்லொழுக்கம் பக்தி முதலிய தூய எண்ணம் துலங்க வேண்டுமெனக் கருதிய கோயில்கள் நிருமாணிக்கப் பெற்றதாகும். இதற்காக மானியங்களும் அவைகளைக் கட்டிய தமிழரசர்களால் ஏராளமாக விடப்பட்டிருக்கின்றன. பஞ்சதந்திரத்தில் பெயர் பெற்று விளங்கும் பார்ப்பனக் கூட்டம் தந்திரமாய் தமிழரசர்களின் தயவாலும் பல தமிழர்களின் மூட நம்பிக்கையினாலும் சன்னஞ்சன்னமாக கோயில் அர்ச்சகர்களென்றும் ஆலயங்களை சுத்தப் படுத்துவோர் என்றும் புகுந்து நாளடைவில் கோயிலையே தங்கள் வசப்படுத்திக் கொண்டார்கள்.

இப்பொழுது சைவ வைணவக் கோயில்களிலெங்கும் பார்ப்பன ஆதிக்கமே மல்கி விட்டது. நாட்டின் நல்ல காலமாக, கோயில் பொருளாதார விஷயத்தில் பார்ப்பன ஆதிக்கமில்லாதபடி—பார்ப்பனர் இஷ்டம் போல் செலவு செய்து கணக்கெழுது வதற்கு முடியாதபடி—இந்து மத பரிபாலனச் சட்டம் என ஒரு சட்டம் வந்து அவர்களின் அகங்காரத்தை ஒருவாறு ஒடுக்கிற்று. இவ்வாறு பார்ப்பனர்களின் 'கொள்ளை'த் தொழிலுக்கு இந்துமத பரிபாலனச் சட்டம் இடராயிருப்பதன் பொருட்டே, பார்ப்பன ராஜ்பக்தை நிலை நாட்டுதற்கு முயன்று வரும் சீனிவாசய்யங்கார் கோஷ்டியினர் அச்சட்டம் கூடாதெனத் தங்கள் வாய்கிழிய ஊளையிட்டு உளறியும் அதை அழிக்க வேண்டுமென்ற ஒரே பெருங் கருத்துடன் சட்ட சபைக்கு மெஜாரிட்டியாகச் செல்ல முயன்றும் வருகின்றனர்.

சமத்துவம் நிலவ வேண்டுமெனக் கட்டப்பட்ட ஆலயம் உயர்வு தாழ்வு கற்பிப்பதற்கு இப்பொழுது உதவி வருகிறது. சுவாமியிருக்கும்படியான கற்பக் கிரகத்திற்குள் ஒரு குறிப்பிட்ட வகுப்பார்தான் போக வேண்டுமென்றும் மற்ற வகுப்பார் போகக் கூடாதென்றும் இன்னின்ன வகுப்பார் கோயிலுக்குள் அடியெடுத்து வைக்கவே கூடாதென்றும் இதை மீறி, ஆண்டவன் பக்தியால், கோயிலுக்குள் பிரவேசித்துவிட்டால், அதனால் ஆலயத்தின் தூய்மையே அழிந்துவிட்டதென்றும், அதனால் ஏற்பட்ட 'தீட்டை'ப் போக்க பார்ப்பனர்களை கும்பாபிஷேகம் செய்ய வேண்டுமென்றும் பார்ப்பனர்கள் பணித்து விட்டனர். இதனைச் சீர்திருத்தம் செய்வதற்கு தமிழ் நாட்டிலே ஓர் பெருங் கிளர்ச்சி ஏற்படல் வேண்டுமென்பது நமது முக்கியக் கருத்துக்களி லொன்று. இந்துமத பரிபாலனச் சட்டம் சமூக சம்பந்தமாய் ஆலயத்தில் நடக்கும் அக்கிரமங்களை ஒன்றும் செய்வதற்கில்லை. தமிழர்களே இதற்கெனத் தனித்ததோர் பெருங்கிளர்ச்சி செய்தல் வேண்டும். இப்பொழுது நமது பார்ப்பனக் கட்சியினர் ஆலய விஷயத்தில் அக்கறை காட்டுவதெல்லாம் தங்களதும் தங்கள் வகுப்பினரதும் வயிற்றுப் பிழைப்பைக் கருதியே யாகும். எனவே கோயில் விஷயமாய்க் கிளர்ச்சி செய்து பெருஞ் சீர்திருத்தம் செய்ய வேண்டிய பொறுப்பு தமிழர்களின் கடமையாகும்.

பினாங்கு வாசியான திரு. வை. க. சபாபதி முதலியார் கோயிலைக் காப்பாற்றுங்களென்று 'தமிழ் நாடு' வாயிலாய் தமிழர்களுக்கு ஓர் வேண்டுகோள் விடுத்துள்ளார். அதில் தமிழ் மன்னர்கள் கட்டிய கோயில்களில் பார்ப்பனர் செல்வாக்கு மிதமிஞ்சியிருத்தலை அழுத்தமாகக் கண்டிக்கிறார். கோயில்களில் பூசை செய்யும் பார்ப்பன அர்ச்சகர்களிற் பலர் ஒழுக்கங்குன்றி இழிதகைமை உடையோராய் இருக்கிறார்களென்பதை நன்கு எடுத்துக் காட்டுகிறார். இதற்குச் சான்றாக,

> சத்தியமின்றித் தனிஞானந் தானின்றி
> ஒத்த விடயம் விட்டோரும் உணர் வின்றிப்
> பத்தியு மின்றிப் பரனுண்மை யின்றி ஊண்
> பித்தேறும் மூடர் பிராமணர்தான் அன்றே,

என்ற திருமூலர் வாக்கை தமிழர்கள் கவனிக்குமாறு அவர் எடுத்துக்காட்டி இடித்துக் கூறுவதோடு, பழிச்செருழுக்கம் மல்கி அந்தணத் தன்மை அருகி, பஞ்சமா பாதகம் நிரம்பியுள்ள ஒரு கூட்டத்தை பிறப்பளவில் உயர்ந்தோரெனக் கருதி கோயில் பூசை செய்ய விடுவதை விலக்கி விட்டு ஒழுக்கத்தால் வேதியராக உள்ள நல்லோர்கள் எந்த ஜாதியில் இருந்தபோதிலும் அவர்களை நமது கோயில்களில் பூசை செய்யுமாறு வேண்டுவன செய்தல் வேண்டுமெனப் பொறித்துள்ளார். 'லோகோபகாரி' பத்திரிகை இதைப்பற்றி எழுதிவிட்டு தன்னுடைய முடிவுரையாக "நமது கோயில்கள் இன்னும் சீரழியாமலிருக்க வேண்டுமானால், நமது சமயம் சிறந்தோங்க வேண்டுமானால், இந்தச் சீர்திருத்தத்தை நம்மவர்கள் இன்னும் தாமதமின்றி உடனே செய்யவேண்டும்" என்று எழுதியுள்ளது. இதனைத் தமிழர்கள் கவனிப்பார்களாக.


கணக்கில்லா நற்சாக்ஷிப் பத்திரம் பெற்றது.

**அயன் மஹா மூலிகை சந்தனாதி தைலம்.**

சிரசைப் பற்றிய நோய்களுக்கு தேவாமிர்தம் போன்றது.

உஷ்ணமான வேலைக்காரர்களுக்கும் உஷ்ணதிரேகி, மாணாக்கர், வக்கீல், ஜட்ஜுகள் முதலியோர் பலரும் உபயோகித்து வருகின்றனர்.

பரிமள மணமும் சிறந்த குண முடையது. பத்தியமில்லை.

கண்ணெரிவு, கண் சிவப்பு, கண் கூச்சம், கண்ணில் நீர் வடிதல், பார்வைக் குறைவு, பித்த மயக்கம், பயித்தியம், ஞாபகக் குறைவு, அஸ்திகாங்கை, மூலச்சூடு, நீர் எரிவு, நீர்க் கடுப்பு, தாகம், நித்திரை பங்கம், பூச்சி வெட்டு, வழுக்கை, மண்டைக் குத்தல், ஒருதலை வலி, தலைச்சொறி, காதுவலி, காதுகுத்தல், மயிர்ப் பிளவு, மயிர் உதிர்தல், செம்பட்டை, ஆரம்பநரை, தேகநாற்றம், முதலிய வியாதிகளைப் போக்கி உரோமத்தை கருக்கச் செய்யும் திறமை வாய்ந்த தைலம் இது ஒன்றே.


TRADE MARK.

12-அவுன்ஸ் பாட்டில் 1-க்கு விலை ரூ. 1-8-0

24-அவுன்ஸ் பாட்டில் 1-க்கு விலை ரூ. 3-0-0

வாரம் இரு முறை எண்ணெய் ஸ்நானத்திற்குப் பதிலாக உபயோகிப்பதுடன் அனுதினமும் தலைவாரிக் கொள்ளலாம்.

| | |
|---|---|
| 40 வகை பித்தத்திற்கும் ஜீரக ரசாயனம் 1-சேர் | ரூ. 2—0—0 |
| இரத்த விருத்திக்கு வீரிய நாது லேகியம் 1-சேர் | ரூ. 2—0—0 |
| பாலர் ரக்ஷணி சாந்த வகை மாத்திரை 200-க்கு | ரூ. 2—0—0 |
| சுக பேதி மாத்திரை அல்லது இராபேதி 100 மாத்திரை | ரூ. 1—0—0 |
| சுக பேதி பவுடர் 100 வேளைக்கு | ரூ. 1—0—0 |
| ஓம சத்து அரை அவுன்ஸ் புட்டி 1-க்கு | ரூ. 1—0—0 |
| காலரா சஞ்சீவி திராவகம் 1-அவுன்ஸ் புட்டி 1-க்கு | ரூ. 2—0—0 |
| காது நோய்க்கு சர்ம பிந்து 1-அவுன்ஸ் புட்டி 1-க்கு | ரூ. 1—0—0 |
| சோகை பாண்டுக்கு அயகாந்த சத்து 40 வேளைக்கு | ரூ. 1—0—0 |

குறிப்பு:— இன்னும் எல்லா வியாதிகளுக்கும் கை கண்ட மருந்துகள் நேரிலாவது தபால் மூலமாவது பெற்றுக் கொள்ளலாம். எனது சுகம் வைத்திய சாலையில் இவ்வருடம் 15000 வியாதியஸ்தர்களுக்கு மருந்து கொடுத்து சகல வியாதிகளையும் குணப்படுத்தி இருக்கிறேன். திருச்சியிலே பிரபல தனவந்தர்களின் குடும்பங்களுக்கு குடும்ப வைத்தியராக இருந்து வருகிறேன்.

டாக்டர். ஜி. எல். சாமி,
சத்திய வேத வைத்தியசாலை. வாகசேரி—திருச்சினாப்பள்ளி.

## ஆகஸ்டு மாத ஆபத்து.

பிப்ரவரி மாதமும், ஆகஸ்டு மாதமும் நமது கவர்ன்மெண்டினுடைய சோரத்தன்மையை பிரகாசமாக்கும் மாதங்கள், பிப்ரவரி மாதம் சாராயக் கடை ஏலம், ஆகஸ்டு மாதம் கள்ளுக்கடை ஏலம்.

நான் பிறந்த ஜாதியாகிய பிராமண ஜாதியின் இறுமாப்பைக் குறித்து, பிராமணரல்லாத தலைவர்கள் பலர், ஊடுருவிப் பாயும் வண்ணம், பரிபூர்ண உணர்ச்சியுடன் எழுதி வருகிறார்கள். இவர்கள் சொல்லுகிற அளவு இறுமாப்பு இருக்கிறதாக நான் கருதவுமில்லை, காணவுமில்லை. குறைந்த அளவுக்கு இறுமாப்பு இருக்கிறது என்பதை நான் ஒத்துக்கொள்ளுகிறேன்.

ஆயினும், அந்த பிராமண அஹம்பாவத்திற்கு, முக்கியமான காரணமும் பண்பும் ஒன்று இருக்கிறது. அதாவது, கள், சாராயம் குடிப்பது பிராமணர்களில் சாதாரணமாய்க் கிடையாது. இங்கும் அங்கும் அது இருந்தாலும், கள், சாராயக் கடை வைத்த பிராமணனை ஒருவனைக் காண்பியுங்கள். கள்ளை விற்று குடிக்க வைத்து, குடியைக் கவிழ்க்கும் பிராமணர்கள் தோன்றிய பொழுது, அந்த ஜாதியின் இறுமாப்புக்கு ஆஸ்திவாரம் இருந்துகொண்டுதான் இருக்கும்.

மகாத்மா காந்தியின் இயக்கம் தோன்றிய பின்னுங்கூட, யோசனையற்று, கருணையற்று, மனுஷ்யத் தனமற்று, ஏலம் கோருவதற்கு, சிங்காரமான ஆடைகள் தரித்துக்கொண்டு, மோதிரங்கள், கடுக்கன்களுடன் பிரகாசித்துக்கொண்டு, மோட்டார் வண்டிகளில், வெகு சொகுசாக ஆனந்த உல்லாசத்துடன் பட்டப் பகலில் பாய்ச்சலாய் ஏலஜாகாவிற்குச் சென்று கொண்டிருக்கிறார்கள்.

ஸ்ரீமான் ஈ. வெ. இராமசாமி நாயக்கர், இப்போது ஓங்கித் தாங்கிவரும், 'சுயமரியாதை' எனும் கொடியானது வருங்காலத்தில் உலகமே ஆதரித்து நடத்தப்போகும் கொடி. சுயமரியாதையை மனுஷ்ய வர்க்கம் பூராவும் பரப்பி ஸ்தாபிப்பதே உண்மையான உலக சேவையாகும்.

அந்த சிறந்த கொடிக்கு ஆதரவு அளிக்க வேண்டுமானால், பிராமணரல்லாதார்கள் ஒருவரும் இந்த ஆகஸ்டு மாதத்திய கள்ளுக்கடை ஏலத்தில் பங்கு எடுத்துக்கொள்ளக்கூடாது. அதிலும் வேளாளர்கள் கண்டிப்பாய் விலகியிருக்கவேண்டும். பிராமணரல்லாதார்கள் இந்த விஷயத்தில் உலகம் மூக்கில் விரல் வைத்து ஆச்சரியப்படும்படியான திறமையை உடனே காட்டவேண்டும். எனக்குத் தெரியும், ஒரு பிராமணப் பிரிய மனுஷர் மரங்களைக் கள் குத்தகைக்கு விட்டார். எத்தனையோ லக்ஷம் ரூபாய் சேர்த்திருந்தும், குடும்பம் சிறியதாக இருந்தும் எவ்வளவோ படித்திருந்தும் எல்லாம் இருந்திருந்தும், கள்ளின் மூலம் அதிகத் தொகையின்மீது நாட்டம் வைத்தார். அதனால் ஏராளமான பணம் சம்பாதித்தார். அவரின் பயனாய் அருமை மகன் குடிகாரன் ஆனான். கள் விற்றுப் பணம் சேர்த்து அந்தப் பணத்தால் கட்டும் சரீரக் கட்டிடங்கள் இந்தவிதமாகத்தான் போய்விடுகின்றன.

இந்த அபாயத்தை விலக்கவேண்டியது நமது கடமை. உடனே ஒரு தீவிர முயற்சியால் மனோவேகத்தைத் திரட்டிக்கொண்டு, ஒரு உத்தமமான 'தப்' பிடித்து, இந்த ஆகஸ்டு மாதம் கள் ஏலம் நடைபெறுமல், ஏலம் கோருவோர் இல்லாமல், நடந்தேறப்படி, ஆண்டவன் அருளும், மஹாத்மாவின் ஆசீர்வாதமும், சுயமரியாதையின் சிறந்து ஓங்கும் கொடியும் பலிக்கச் செய்யவேண்டும் எனப் பிரார்த்திக்கும்,

வி. மகாலிங்கய்யர்.

## பெரம்பலூர் தாலுகா பார்க்கவர் மஹாநாடு.

இம் மஹாநாடு வேப்பந்தட்டை கிராமத்தில் ஆவணி-மீ 7, 8-உ களில் கூடும். மஹாநாட்டிற்கு அக்கிராசனராக மாரண்ட ஹல்லி மிட்டாதார் பார்க்கவ பந்து டா. ர. வெங்கடாசல உடையார் அவர்களைத் தெரிந்தெடுக்கப்பட்டது. சொற்பொழிவாளர்களாக திருவாளர்களான ஈ. வெ. இராமசாமி நாயக்கர், டி. ரா. குமாரசாமி உடையார், சாமி சிதம்பர உடையார், மே. வெ. துரைசாமி உடையார் ஆகியவர்கள் விஜயம் செய்வர். இதனைக் குறித்த விபரமும், நிகழ்ச்சிக் குறிப்பும் பின்னர் வெளியிடப்பெறும் என்று மஹாநாட்டின் காரியதரிசி எழுதுகிறார்.

## செங்குட்டம் பாளையம்.

கோயமுத்தூர் ஜில்லா செங்குட்டாம் பாளையத்தில் பிரபல வியாபாரியாகவும் பெரிய குடித்தனக்காரராகவும் விளங்கிய திரு. பெரியண்ண கவுண்டர் 24—7—26 தேதி விண்ணுற்றார் என்ற செய்தி கேட்டு நாம் பெரிதும் வருந்துகிறோம். நமது அனுதாபத்தை இதன் வாயிலாய் அவரது குடும்பத்தினருக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

## ஆதி திராவிடப் பிரதிநிதி.

நிகழும் 1926-ஹு ஜுலை-மீ 13-உ தூத்துக்குடி ஆதி திராவிட ஐக்கிய சங்கத்தார் கனம் எ. எம். ஆர். வில்சனவர்களின் தலைமையின்கீழ் ஒரு கூட்டங்கூடி ஸ்ரீமான் ஆர். வீரையன் எம்.எல்.ஸி. அவர்களை திரும்பவும் சென்னை சட்ட சபையில் ஆதி திராவிடப் பிரதிநிதியாய் அமர்த்த வேண்டுமென்று தீர்மானித்து காருண்ய சென்னை கவர்ன்மெண்டாருக்கு ஒரு மகஜர் அனுப்பி இருக்கிறார்கள்.

P. பலவேசம்.

## தென்னிந்திய ரயில்வே தொழிலாளர் சங்கம், நாகை.

சட்ட சபைகளில் தொழிலாளர் பிரதிநிதித்துவம் என்ற விஷயத்தைப்பற்றி ஓர் அவசரப் பொது ஜனக் கூட்டம் 23-7-26-ம் தேதி மாலை 5-30-மணிக்கு சங்க கட்டிடத்தில் உப அக்கிராசனர் த. கோவிந்தசாமி செட்டியார் அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் நடைபெற்றது. கீழ்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

1. இந்திய மாகாண சட்ட சபைகளுக்கு தொழிலாளர் பிரதிநிதிகள் நியமிப்பதைப் பற்ற இந்தியா மந்திரி சம்மதித்திருக்கிற 4 பிரதிநிதிகளில் சென்னை மாகாணத்திற்கு ஒரு பிரதிநிதியாவது இல்லாமலிருப்பதைப் பற்றி இக் கூட்டம் வருந்துகிறது.

2. மற்ற மாகாணங்களுக்குக் கொடுத்திருப்பதுபோல சென்னை மாகாணத்திற்கும் இரண்டு பிரதி நிதிகள் கொடுக்க வேண்டுமென்று இக்கூட்டம் வற்புறுத்துகிறது.

மேல்கண்ட தீர்மானங்களை சென்னை கவர்ன்மெண்டுக்கும் இந்தியா கவர்ன்மெண்டுக்கும் சமாசாரப் பத்திரிகைகளுக்கும் அனுப்பி வைக்கும்படி காரியதரிசிக்கு உத்திரவு கொடுத்திருக்கிறது.

D. கிருஷ்ணசாமி, காரியதரிசி.


# ஆனந்த குணபோதினி

ஒரு நூதன உயர்தர தமிழ் மாதப் பத்திரிகை

பிரசித்த அநுடவஞான சாஸ்திரி இதன் ஆசிரியராய் விளங்குகிறார்.

இத்தகைய நவீன ஸஞ்சிகை இதுவரை வெளிவந்ததில்லை. இது தமிழ் அறிந்த ஒவ்வொருவர் அகத்துள்ளும் புகுந்து நிலவும் உன்னதம் வாய்ந்தது. சித்திரப்படங்களுடன் திகழ்வது. கல்விச் செல்வம், பொருட்செல்வம் பெருகி இன்பம் ஓங்குதற்குரிய வியாசங்களால் ஒளிர்வது. அறிவை விளக்கி உற்சாகத்தைக் கொடுப்பது. நன்னடக்கையும், லௌகீக யுக்தியும், பாஷை ஞானமும், தேசாபிமானமும், ஈசுவர பக்தியும், ஆழ்ந்த யோசனையையும் உண்டாக்கக் கூடியது. எல்லா மதஸ்தர்களுக்கும், எல்லா ஜாதியார்களுக்கும் ஏற்றதாய் நல்ல விஷயங்கள் இருக்கப் பெற்றது. சொல் நயம் மிகுந்து தமிழ் உலகமெல்லாம் ஜொலிக்கும்படியாயிருப்பது "ஆனந்த குணபோதினி" தான். ஆடவர், மகளிர், பெரியோர், சிறியோர், எவர் கையிலும் இப்பத்திரிகையை இனிக் காணலாம்.

இதில் "ஆனந்த தரிசனம்" "பழமொழிக் குறிப்புகள்" "பத்திரிகா சாரம்" "பெண்கள் பக்கம்" "பிரபஞ்ச தரிசனம்" "விகடப் பிரதாபன்" "சென்ற மாதம்" என்ற தலைப் பெயர்களின் கீழ்வரும் ஒவ்வொரு விஷயங்களும் சிந்தைக்கினிய செவிக்கினிய வாய்க்கினிய அலங்கார வசனமழையாய் விளங்கும். இப்பத்திரிகையே எவ்விஷயத்திலும் வெகு சிறந்ததென்பதை தங்களுடைய அநுபவத்தில் தாங்களே அறிந்து கொள்ளலாம். ஆனந்த குணபோதினியின் சொற்ப சந்தாவை உற்று நோக்குங்கள். வருஷச் சந்தா ரூபாய் ஒன்றே (ரூ-1) இன்றே எழுதுங்கள், உடனே சேருங்கள்.

தி. இராஜகோபால் முதலியார்,
புரோப்ரைட்டர், "ஆனந்த குணபோதினி" ஆபீஸ்,
302, தங்கசாலைவீதி, சென்னை.

## மதிப்புரை.

### மதுரைவீரன் சரிதம்.

தமிழ் நாட்டிலே பல அரிய வீரர்களும் பெரிய ஆசிரியர்களும் சிறந்த அரசர்களும் மற்றும் என்றென்றும் போற்றத்தக்க பெரியார்களும் தலைசிறந்து விளங்கியுள்ளார்கள். அத்தகையாரிற் பலரின் உண்மைச் சரிதம் இன்னும் வெளிவாராதிருந்து வருகின்றன. பலகாலும் முயன்று அவைகளை வெளியிடப் பேறுக்கங் கொண்டுள்ளார் மிகச் சிலரே.

தமிழ் நாட்டிலே தமிழர் என்றும் மறவாதவாறு குலதெய்வமாகவும் குடித் தெய்வமாகவும் வணங்கப் பெறும் தமிழ் நாட்டு வீரன், மதுரை வீரன் பிறந்த இடம் இருந்தகளம் காலம் முதலியவற்றோடு உண்மைச் சரிதம் வரைய சில தமிழ் நூல் வல்லுநர்கள் முயன்றும் முற்றுப்பெறா திருந்துவருகிறது.

இப்பொழுது மதுரை திரு. ம. அழகர்சாமிப் பிள்ளை மதுரை வீரனைப் பற்றிய ஓர் உண்மைச் சரித்திரம் வெளியிட்டுள்ளார். இஃது புகழேந்திப் புலவர் ஆக்கிய பல அம்மானைகளைப் போல் அம்மானை நடையில் எளிய தமிழில் படித்தோரும் பாமரரும் உணரத்தக்க வகையில் எழுதப்பட்டிருக்கிறது. இந்நூலை திரு. பிள்ளை அவர்கள் எழு வருட காலமாக முயன்று மதுரை மீனாட்சியம்மன் தேவஸ்தானத்தி லிருக்கும் பல பழைய கையெழுத்துப் பிரதி, ஏட்டுப் பிரதி, இங்கிலீஷ், பிரான்ஸ் மொழிபெயர்ப்புக்களும் ஆகிய பல ஆதாரங்களையும் கொண்டு எழுதி உள்ளதாக அறிகிறோம். இக்காலத்தில் அம்மானை நடை நூலை விரும்புவோர் மிகச் சிலர், திரு. பிள்ளை இதனை வசன நடையில் எழுதி வெளியிடுவரேல் பெரிதும் நலம் பயக்கும். இதன் விலை அணா 12, கிடைக்குமிடம்:— ம. அழகர்சாமி பிள்ளை, புத்தக வியாபாரம், புதுமண்டபம், மதுரை.

### வைத்திய சந்திரிகா.

சுதேச வைத்திய முறைகளாகிய தமிழ் சித்த வைத்தியம், ஆயுர்வேத வைத்தியம் யூனானி வைத்தியம் ஆகியவற்றைப் பண்டை நாட்டு சுதேச மன்னர்கள் காலங்களிலிருந்த நிலைமைக்குக் கொண்டுவர சின்னாட்களாக ஓர் நல்லுணர்ச்சி பரவி வருகிறது. மேனாட்டு சிகிச்சா முறையில் மூழ்கிக் கிடந்த படித்தவர்களெனப் படுவோரிற் பலர் சுதேச வைத்திய முறையினையே ஓம்பத் தலைப்பட்டு வருவது நல்லறி குறியேயாகும்.

சுதேச வைத்திய முறையை ஓம்பி வளர்க்கும் உறு கடனை ஒரு கடனாகக்கொண்ட பல மாசிகைகள் நடைபெற்று வருகின்றன. அவற்றுள் ஒன்றாகிய பண்டித நாராயண ஐயங்காரை ஆசிரியராகக் கொண்ட "வைத்திய சந்திரிகா" என்னும் மாசிகையின் இரண்டாம் வருட முதல் பகுதி நமது பார்வைக்கு வரப்பெற்றோம். சென்ற ஆண்டு இதன் முதல் வருட முதற் பிரதிக்கு மதிப்புரை எழுதியிருக்கிறோம். இவ்விரண்டாம் ஆண்டில், வைத்திய விஷயத்தைப் பற்றிய ஏட்டு கிரந்தங்களில் ஒன்றை வெளியிடப் பிரயத்தனப்பட்டு வருவதாகவும், ஔஷத சாரம் என்ற மருந்து பாகத்தையும் சிறுகச் சிறுக வெளியிடப் போவதாகவும் அறிகிறோம். வைத்திய உலகிற்கு "வைத்திய சந்திரிகா" செய்து வரும் தொண்டு போற்றத் தக்கதாகும். பிற பாஷைகளிலுள்ள வைத்திய நூல்களின் மொழி பெயர்ப்புகளும் இதில் வெளிவருகிறது. இதன் வருட சந்தா ரூ. 2. விலாசம்:—

"வைத்திய சந்திரிகா", கரூர்.

### மா மௌன மணிக் கோவை என்ற மெய்ஞ்ஞான அனுபூதி ரஸம்.

மதுரை ஜில்லா பெரியகுளம் வராக நதி வடகரையிலுள்ள ஸ்ரீ மௌன குரு சுவாமிகளால் ஆக்கப்பட்ட மாமௌன மணிக் கோவை என்ற மெய்ஞ்ஞான அனுபூதி ரசம் என்ற நூல் வரப்பெற்றோம். இஃது ஸ்ரீலஸ்ரீ இராமலிங்க சுவாமிகளின் அருட்பாவின் முறையைத் தழுவியதாயிருக்கிறது. இதன் பாக்கள் அனைத்தும் சிறந்த செம்மணிகளா யிலங்குகின்றன. பக்தி ரசத்தையும் சன்மார்க்க போதமும் "சும்மா"விருக்கும் கோடினையும் செறிந்த பாக்களை இதில் மிகுதியாகக் காணப்படுகின்றன. சத்திய நிலை, நிர்க்குணக் கண்ணி, மருந்து, நிர்ச்சின்னத் தட்டான், நிர்வாணாம்பு, மெய்ஞ்ஞான நிலை, பாங்கிமார்க்கண்ணி, ஜெபசங்கு முதலிய தலைப்பங்களிலுட் காணப்பெறும் பாக்கள் நம் உள்ளத்தை கவர்கின்றன. இந்நூல் நல்ல கெட்டியான கடிதத்தில் 500 பக்கம் கொண்டதாகும்.

இத்துடன் முற்கூறிய பெரியாரை ஆசிரியராகக் கொண்ட அத்துவிதப் பறை என்ற ஒரு சிறு நூலும் வரப் பெற்றோம். இதுவும் அதே அளவில் 32-பக்கங்களில் 261 மூவடிப்பாக்கள் கொண்டதா யிருக்கிறது. இரண்டையும் 6 அணா தபால் தலை அனுப்புவோருக்கு அனுப்புவதாக நமக்குத் தெரிவித்திருக்கிறது. முதற்கூறிய புத்தகத்தின் முறையில் எழுதிய கடிதத்தில் எழுதப்பட்டிருக்கிறது. இவ்வளவு ஆறும் தபாற் செலவுக்கே யாகும். முதற்கூறிய புத்தகத்தின் மைண்டு செலவு மட்டிலும் அணா 5-க்கு மேலாகுமென்று நினைக்கிறோம். இவ்விரண்டு புத்தகங்களிலும் பல உண்மைகள் விளங்குகின்றன. இது கிடைக்குமிடம்:—

எஸ். எ. சோமசுந்தரம், பெரியகுளம்.


தங்க மெடல்களும், அநேக நற்சாக்ஷி பத்திரங்களும் பெற்ற

**ராஜவைத்திய ஆஸ்ரமம்,**

கால்வாய் விலாசம்
பிரஸ்ஸுக்கு எதிரில்
செவ்வாய்ப்பேட்டை, சேலம்.

மேகரணங்கள், வெள்ளைவியாதி, ராஜபிளவை, கட்டிகள், நீடித்த மூல பவுத்திர வியாதிகள் ஆபரேஷன் இல்லாமல் சௌக்கியம் செய்யப்படும். வியாதிக்கு எழுதுங்கள்.

ஆயிரக்கணக்கான

**மூல பவுத்திர வியாதி** யஸ்தர்கள்

சௌக்கியமடைந்திருக்கிறார்கள்.


### தமிழர்களே!

**இதில் எதை ஆதரிப்பீர்கள்?**

பிராமணியம் நாட்டைப் பாழாக்கும்.
தீண்டாமை மாற்றானுக் கிடங்கொடுக்கும்.
நெருங்காமை-திட்டு-அறியாமையை வளர்க்கும்.
கதர் ஆடை வறுமையைப் போக்கி ஒற்றுமையை உணர்த்தும்.


ஆயிரக் கணக்கான நற்சாக்ஷிப் பத்திரங்களும் தங்க மெடல்களும் பரிசுபெற்றது.

உலகப் பிரசித்திபெற்ற

**மஹா சந்தஜோதி தயிலம்.**

இந்த தயிலமானது மூளைக்கும், கண்களுக்கும் குளிர்ச்சியைத் தரக்கூடிய அநேக பச்சிலை மூலிகைகள் சேர்ந்தது.

இத் தயிலத்தை வாரம் இருமுறை ஸ்நானம் செய்துவந்தால் கை, கால், கண் எரிச்சல், கண்ணில் நீர் வடிதல், கண் சிகப்பு, நித்திரையின்மை, தலைநோய் மண்டைக் குத்து, மூளைக்கொதிப்பு, காதில் வலி, சீழ் வருதல், பீனிசம் முதலிய பலவித நோய்களையும் குணப்படுத்தக்கூடியது.

இத்தயிலத்தை உபயோகித்த கனவான்கள் புகழ்ந்து எழுதும் கடிதங்கள் நாள் தோறும் வந்துகொண்டே யிருக்கிறது. இத்தயிலத்தை மேல்சொன்ன நோயுள்ளவர்களும், யாதொரு நோயுமில்லாத ஆண், பெண் யாவரும் உபயோகிக்கலாம். ஒரு முறை பரிக்ஷித்துப் பார்த்தால் உண்மை விளங்கும். பத்தியமில்லை.

24 அவு. பாட்டில் ரூ. 4—0—0
12 அவு. பாட்டில் ரூ. 2—2—0
வி. பி. தபாற்செலவு பிரத்தியேகம்.

**சாலாமிசிரி லேகியம்.**

சிறந்த தாதுபுஷ்டி மருந்து.

இந்த லேகியத்தை சில நாள் சாப்பிட்டு வந்தால் குறைவற்ற ஆண்தன்மை உண்டாவதுடன், கைகால் அசதி, இடுப்புவலி, பலஹீனம், நரம்புத்தளர்ச்சி, சொற்பனஸ்கலிதம், சம்போக காலத்தில் உண்டாகும் துரிதஸ்கலிதம் முதலிய கொடிய வியாதிகளை நீக்கி, ராஜகருவிகளுக்கு வலுவைக்கொடுத்து, தளர்ந்த நரம்புகளை கெட்டிப்படுத்தி, இரத்தத்தையும், வீரியத்தையும் விருத்தி செய்து நல்ல திடகாத்திர சரீரத்தை உண்டாக்கும். பத்தியமில்லை.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2—8—0
வி. பி. தபாற்செலவு ரூ. 0—8—0

விலாசம் தெரிவிப்பவர்களுக்கு பலவிதமான மருந்துகள் விபரம் அடங்கிய கேட்லாக் இனமாக அனுப்பப்படும்.

டி. சி. சிங்காரம் அண் கோ.,
சித்த ஆயுர்வேத ஔஷதசாலை,
தெப்பக்குளம் போஸ்டு திருச்சினாப்பள்ளி.

## ஓர் பார்க்கவ குல திருமணம்.

### கதரும், காணிக்கையும்.

23-6-26-தேதி யன்று நஞ்சுண்டாபுரம் ஸ்ரீ. கருப்பண்ண உடையாரவர்கள் குமாரத்தி சௌபாக்கியவதி அம்மணி யம்மாளுக்கும் ஸ்ரீமான் குமாரசாமி உடையார் அவர்கள் குமாரன் சிரஞ்சீவி கருட்பண்ண உடையாருக்கும் விவாகம் இனிது நடந்தேறியது.

தம்பதிகளுக்குக் கதராடையே அணியப்பட்டது. இளைமளிக்கப்பட்ட வஸ்திரங்களும் கதரே. விவாஹ முகூர்த்தம் நடந்த பின் முதன் முதல் மகாத்மா காந்திக்கு ஒரு காணிக்கையாக தாம்பூலத்துடன் ஒரு ரூபாய் வைக்கப்பட்டது. ஷை ரூபாயும் தாம்பூலத்திற்கு அணு நான்கும் சபர்மதி ஆசிரமத்திற்கு அனுப்பப்பட்டன.

இவ் வாண்டு கும்பகோணம் பார்க்கவ குல 12-வது மகாநாட்டு தீர்மானங்களின் படி பார்க்கவ சங்க நிதிக்கு ஒரு ரூபாய் முதல் தத்தம் சக்திக்கு ஏற்றவாறு காணிக்கை செலுத்த வேண்டுமென்ற திட்டத்தின்படிக்கு அந் நிதிக்கு ரூபாய் இரண்டு வைக்கப்பட்டன. ஷை நிதிக்கு இன்னும் சரியான பொறுப்பு வாய்ந்த அங்கத்தினர்கள் ஏற்பட்டு அமுலுக்கு வராததினால் ஷை ரூபாய் இரண்டும் இவ்வூர் கோயில் மணியம் ஸ்ரீமான் பூமலை உடையார் வசம் அளிக்கப்பட்டது.

பார்க்கவ குல பிரதிநிதிகள் இவ் விஷயத்தில் சிரத்தை எடுத்து இத் திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவருவதுடன் இம்மாதிரி செய்கையில் காட்டுவார்களாகில் பார்க்கவ சமூகம் முன்னேற்ற மடைய மிக்க எதுவாயிருக்கும் என்று துத்திகுளம் திரு. கே. மாரப்ப உடையார் எழுதுகிறார்.

## ஓர் வேண்டுகோள்.

தென்னிந்தியா செங்குந்த மரபினர்களின் நன்மையை நாடி ஷை மரபினர்களுக்குள் பங்கு ஒன்றுக்கு ரூபாய் 50 விதம் 200 பங்குகள் சேர்த்து 'செங்குந்தர் கம்பெனி லிமிடெட்' என ஒரு ஸ்தாபனத்தை அமைப்பதென்வும் அச்சபையின் சார்பில் பள்ளத்தூரில் ஒரு அச்சுக்கூடம் ஸ்தாபிப்பதெனவும் கார்த்திகை முதல் வாரமிருந்து "அருணகிரி" யென்ற ஒரு வாரப் பத்திரிகையை வெளியிடுவதெனவும் அது பொதுவாக தேசத்திற்கும் சிறப்பாக தன் ஜாதிக்கும் உழைப்பதெனவும் சந்தாவாக உள்நாட்டிற்கு ரூபாய் நான்கும் வெளி நாட்டிற்கு ரூபாய் ஐந்தும் வசூலிப்பதெனவும் மலையா நாட்டிலுள்ள செங்குந்தர்கள் நிச்சயித்து வேலைகள் நடந்து வருகிறது. ஷை கம்பெனி சம்பந்தமாயும் பத்திரிகை சம்பந்தமாயும் இதர விபரங்களறிய வேண்டியவர்கள் சி. ரா.ம. ராமநாத முதலியார், 5-ஆன்சன் ரோடு, டெலுக்கான்சன்; யென்ற விலாசத்திற்கு யெழுதித் தெரிந்து கொள்ளலாம். பங்குகள் விற்றவுடன் வேண்டுமானால் கம்பெனியை ரிஜிஸ்தர் செய்யப்படும். 600 சந்தா சேர்ந்தவுடன் பத்திரிகை ரிஜிஸ்தர் செய்யப்படுமென ஒரு நிருபர் யெழுதுகிறார்.

## சேலம் நகர பரிபாலன சபை கவனிக்குமா?

இச்சமயம் சேலம் நகர எல்லைக்குள்ளிருக்கும் ஜல கஷ்டத்தை சொல்லத் தேவையில்லை. தினந்தோறும் ஒவ்வொரு கிணராய் ஜலம் வத்திக்கொண்டே யிருக்கிறது. இச் சமயம் ஊரில் உள்ள ஜலம் ஊர் ஜனங்களுக்கே போதாமலிருக்கிறது. மேல்கொண்டு ஜனங்கள் பெருந்தொகையாக வந்து சேர்ந்தால் பின் நகரத்தின் தண்ணீர் நிலைமை என்ன ஆகும் என்பதை கவனிப்பது நகர பரிபாலன சபையின் கடமையாகும்.

ஆடி மாதம் பிறந்துவிட்டது இன்னும் கொஞ்ச நாளில் இந் நகருக்கு பல பாகங்களிலிருந்து பெருந்தொகையான ஜனங்கள் வந்து சேரப் போகிறார்கள். அது சமயம் தண்ணீர் கஷ்டம் மிகவும் கொடுமையாக இருக்கப்போகிறது. தண்ணீர் கொடுமைக்காக ஆற்று ஜலத்தைக் கிராம வாசிகள் உபயோகிப்பார்கள். இதன் காரணமாக, 12 வருடங்களாய் மறைந்து நிற்கும் பேதியம்மை பிரசன்னமாகப் போகிறாள். அவ்வம்மை பிரசன்னமானால் பல ஜனங்களுக்கு மோக்ஷ சாதகம் கிடைப்பதும் நிச்சயம்.

இத்தகைய சந்தர்ப்பத்தில் நம் நகர பரிபாலன சபை முன் எச்சரிக்கையாகவே கூடிய வரையில் ஜல வசதியை செய்து கொடுப்பதுடன் ஜனங்கள் ஆற்று நீரை உபயோகப்படுத்தாம லிருக்கும்படி தக்க பாதுகாப்பு செய்யக் கடமைப்பட்டிருக்கிறது.

வை. நடேசன்.

## பவானியில் காலரா.

கோயமுத்தூர் ஜில்லா சுகாதர இலாகா அதிகாரி பொது ஜனங்களுக்குத் தெரிவிப்பதாவது:—

பவானி தாலூகாவில் ஜூலை மாதம் 12-ந் தேதி வரையில் 129 பேர்கள் காலரா என்னும் கொடிய பிணிவாய்ப்பட்டு, 67 பேர்கள் இறந்து விட்டனர். பவானி நதிக்கரையிலுள்ள மற்றும் பல கிராமங்களும் இந் நோயால் பிடிக்கப்பட்டிருக்கின்றன. வேண்டிய அளவு தடுக்கும் முறை சிரத்தையுடன் எடுத்துக்கொண்ட போதிலும், வரப்போகும் ஆடி 18 ஸ்நான உத்ஸவத்திற்கு தீர்த்த யாத்திரிகள் இந் நோயால் பிடிக்கப்படுவார்களென்ற பயம் இருப்பதால், அவர்கள் அங்கு போகாமல் இதன் மூலம் தடுக்கப் படுகிறார்கள். அகத்தியம் தீர்த்த யாத்திரைக்குப் போக விரும்புவோர் காலரா அம்மை குத்திக்கொண்டு போகலாமென தெரியப் படுத்தப்படுகிறார்கள்.


## பிரமேககுல சம்ஹாரி.

சகல வெள்ளை, வெட்டை, தடிப்பு, ரணம் மேக நோய் 21-ம் 5-தினத்தில் தீர்க்கிறது. புட்டி ரூ. 2.

மதன கோலாகல ரசமணி மாத்திரை

இரவில் ஒரு மாத்திரை சாப்பிட்ட அரை மணி நேரத்தில் சிங்க வீரியம்போல் தாதுபுஷ்டியுண்டாக்கும். குளிகை 100-ரூ. 8. 50-ரூ- 4. 25-2.

வி. பி. சார்ஜ் வேறு. கேட்லாக் இனாம்.

ஸ்ரீராமபிரான் வைத்தியசாலை,

திருச்செங்கோடு: (தென் இந்தியா)


## இந்தியர் கஷ்ட நிவாரண பாங்கு "லிமிடெட்" கோயமுத்தூர்.

| | | |
|---|---|---|
| காப்பு திரவியம் | ரூ. | 2,706. |
| மூல திரவியம் | ரூ. | 5,00,000. |
| வெளியிடப்பட்டது | ரூ. | 69,100, |
| வசூலிக்கப்பட்டது | ரூ. | 43,890. |
| டிபாசிட்டுகள் | ரூ. | 62,580-1-0. |

டிபாசிட்டுகள் அடியிற்கண்ட வட்டி வீதத்திற்கு பெற்றுக்கொள்ளப்படும்.

சேவிங்ஸ் பிக்செட் டிபாசிட்டு

இரண்டு வருஷ, கெடுவு வட்டி.

100-க்கு மாதம் 1-க்கு ரூ. 0—10—0

வருஷம் 1-க்கு வட்டி ரூ. 7—8—0

இதற்கு பிரதி மாதமும் வட்டி கொடுக்கப்படும்.

பிக்செட் டிபாசிட்டு.

ஒரு வருஷ கெடுவு, வட்டி.

100-க்கு மாதம் 1-க்கு ரூ. 0—9—0

வருஷம் 1-க்கு வட்டி ரூ. 6—12—0

இதற்கு வட்டி 6-மாதங்களுக்கொருமுறையாவதும் வருஷத்திற் கொருமுறையாவதும் கொடுக்கப்படும்.

ஷை பாங்கானது ஆரம்பிக்கப்பட்டு ஒரு வருஷ காலமாக ஒழுங்காக நடந்து வருகிறது. நாளது 10-2-26-உ வருஷாந்திரக் கூட்டமும் நடைபெற்றது. இப்பாங்கானது கோயமுத்தூரில் உள்ள இம்பீரியல் பாங்கை தவிர்த்து மற்ற பாங்குகளைப்போல் 100-க்கு நாள் 1-க்கு ஒரு அணாவும், அதற்கும் அதிகமாகவும், அதிகவட்டி வாங்காமலும், புதிய விதிகளுடனும் குறைந்த வட்டிக்கு (அதாவது 100-க்கு, 0—12—0, 1—0—0) ரூபாயிக்கு எவ்வகையிலும் அதிகப்படாமல் ஏழை ஜனங்களுக்கு அநேக சௌகர்யமாகவும் இருப்பதோடு, குறைந்த பங்குகளிலேயும் மானேஜிங் டைரெக்டர், அவர்களுடைய திறமையினாலும், முயர்ச்சியினாலும், பங்குக்காரர்களுக்கு முதல் வயதிலேயே 100-க்கு ஒரு ரூபாய் வட்டி கொடுக்கப்பட்டிருப்பதுவும் தவிர ரிசர்வு பண்டு ரூபாய் 2,706 சேர்ந்திருக்கிறது. நாளதுவரை யாதொரு போக்குக்குத்தியில்லாமலும் இருப்பதிலிருந்து மானேஜிங் டைரெக்டருடைய தீர்க்காலோசனையும், பாங்கின் நல்ல ஸ்திதியையும் காட்டுகிறது. மேலும் அதிகமான பங்குகள் சேர்ந்து ஏராளமான லேவாதேவி நடந்தால் இப்போது கிடைத்த இலாபத்தைவிட அதிக இலாபம் கிடைக்குமென்றும், ஏழைகளுக்கும் பெரிய உபகாரமாக இருப்பதற்கும் கடவுள் கிருபை செய்வாராக.

சுபம்! சுபம்!! சுபம்!!!

குறிப்பு:—

இந்த பாங்குக்கு ஏற்பட்டிருக்கும் டைரக்டர்கள் ஒவ்வொருவரும் தனித்தனி சொந்த பாங்கு நடத்தக்கூடிய சக்தி வாய்ந்த பெரிய பெரிய தனவந்தர்களாகவும், அமையப்பெற்றிருப்பதால் யாவரும் தங்களிடமுள்ள திரவியத்தை டிபாஸிட்டாகவும் பங்குத் தொகைக்காகவும் இப்பாங்குக்கு அனுப்பி உங்களுடைய பணத்திற்கு யாதொரு நஷ்டமின்றி வட்டியுடன் பெற்றுக்கொள்வதோடு, உங்களுடைய திரவிய சகாயத்தினாலும், ஏழைகளுக்கும் சகாயம் செய்த பாக்கியமும் அடைவீர்கள் என்பதற்கு யாதொரு தடையுமில்லை.

ஜி.ராமச்சந்திர செட்டி,

31—5—26. மானேஜிங் டைரக்டர்

# மின்சார ரசம்

## எல்லா வியாதிகளுக்கும் தேவாமிர்தம் போன்றது

*மின்சார ரசத்தின் குணம் எப்படி?*

இது ஒரு அபூர்வமான சஞ்சீவி. இதற்கு இயற்கையாகவே ஒரு வித மின்சார சக்தியுண்டு. எந்த வியாதிக்கும் துளிகள் கணக்கில் உபயோகித்து நிமிஷக் கணக்கில் குணமடையலாம். பாஷாண சம்பந்தமான சரக்குகள் இதில்கிடையாது.

*மின்சார ரசத்தின் விசேஷமென்ன?*

மனிதர்களுக்கு வரும் எல்லா வியாதிகளையும் இந்த ஒரே மருந்து வெகு ஆச்சரியகரமாக குணப்படுத்துகிறது. உள்ளுக்கும் மேலுக்கும் இந்த ஒரே மருந்தை உபயோகிக்கலாம். எந்த விதமான அனுபானமு மில்லை. எவ்வித பத்தியமு மில்லை. பால்யர் முதல் விருத்தாப்பியர் வரையில் ஸ்திரீகள் உள்பட எல்லோரும் எக்காலத்திலும்பயமின்றி உபயோகிக்கலாம்.

*மின்சார ரசத்தின் அனுபோகம் எப்படி?*

கை கண்ட மருந்து. ஆயிரக்கணக்கான ஜனங்கள் இதை தினந்தோறும் இந்தியாவிலும் வெளி நாடுகளிலும் உபயோகித்து வருவதே இதற்கு போதுமான சாக்ஷியாகும். வாங்கினவர்களே பலமுறை ஆர்டர் தருகிறார்கள்.

ஒரே முறை பரீக்ஷியுங்கள்! அநேக நற்சாக்ஷிப் பத்திரங்கள் அடங்கிய எங்கள் புது கேட்லாக் வேண்டுபவர்களுக்கு இனாமாக அனுப்பப்படும். இன்றைக்கே எழுதுங்கள்.

**ஒரு புட்டியின் விலை ரூ. 2. தபால் செலவு வேறு.**

**மின்சார ரசம் கம்பெனி லிமிடெட், சேலம். (S. I.)**

தந்தி விலாசம்:—'Rasamco', Salem.

இங்கிலீஷ் படிக்க அவலுடன் எதிர்ப்பார்த்திருந்த அன்பர்களே! ஏன் நீங்கள் கவலைப்படுகிறீர்கள்!!

23000 ஜனங்களுக்கு ஆங்கிலம் விரைவில் கற்றுகொடுத்தது

7-ம் பதிப்பு] இப்புத்தகம் ஒன்றேதான்!!! [7-ம் பதிப்பு

7000-பக்கங்கள் கொண்ட முழு கலிகோ பயிண்டு புத்தகம் விலை ரூ. 2. ஸ்ரீராமர் சீதா திருக்கலியாண படமும், பட்டாபிஷேக ஆப்டோன் படமும் உள்ளது.

# "ஆங்கில ஆசான் அல்லது போதினி"




எமது ரிஜிஸ்டர்ட் "லேடி டிரேட் மார்க்கு" போட்டிருக்கும் புஸ்தகம் பார்த்து வாங்குங்கள்!

மோசம் போகாதீர்கள்.

தமிழ் தெரிந்தவர்கள் ஆங்கில பாஷையை ஆசிரியர் இல்லாமலே அதி சீக்கிரத்தில் பணச் செலவின்றி சுயமாகவும், சுலபமாகவும் கற்றுக்கொள்ளலாம். உலக அனுபவத்திற்கு வேண்டிய பல விவகாரங்களின் பதங்களைப் படிப்படியாக நூதன பாட முறைகளுடன் வெளியிடப்பட்டிருக்கிறது. கிராம முன்சிப், கர்ணம், கான்ஸ்டேபில்கள், கங்காணியர்கள், பட்லர்கள் முதலிய எல்லா தொழிலாளர்களுக்கும் மிகவும் முக்கியமானது.

23000-காப்பிகள் இது வரையில் செலவழிந்திருப்பதே இதன் பெருமையையும் இன்றியமையா உபயோகத்தையும் விளக்கிக்காட்டும். எல்லா ஊரிலும் எல்லா புத்தக ஷாப்பிலும் கிடைக்கும். எல்லா விடங்களிலும் ஏஜண்டுகள் தேவை.

**தி. இராஜகோபால் முதலியார்,**
302, தங்கசாலைத் தெருவு, மதராஸ்.

பண்டித எஸ். எஸ். ஆனந்தரின்

**மஹா சந்தனாதித் தைலம்**

தைலங்களுக்கெல்லாம் தலைமையானது!
வெயில் காலத்திற்கு மிகப்பயனுள்ளது!!

இம் மகா சந்தனாதித் தைலத்தை அரசர்களும் ஆங்கில மருத்துவர்களும், ஐக்கோர்ட் ஜட்ஜுகளும், வக்கீல்களும், கல்வி கற்கும் மாணவர்களும் ஆண்டு அநுபவித்து நற்குணங்களைப் புகழ்ந்து கூறியிருக்கிறார்கள். அவைகளை நமது மருந்து விலைப்பட்டியின் நன்மதிப் பிதழில் காணலாம்.

24-அவுன்ஸ் புட்டி 1-க்கு ரூ. 4—4—0
12-அவுன்ஸ் 2—4—0. 6-அவுன்ஸ் 1—8—0

தமிழ் மருத்துவ சாலை,
220 தங்கசாலைத் தெரு, சென்னை

இனாம்! இனாம்!!

**ரகஸ்யரத்னம்**

அல்லது

**வாழ்க்கை நலம் புகட்டும் நூல்.**

வைத்திய அனுபவங்கள், வாழ்வின் மர்மங்கள், இரகசியக் குறிப்புக்கள், விவாகமானோர் அறிய வேண்டிய விஷயங்கள், பெண்களின் சம்பந்தமான பலவகை விவரங்கள் இல்லற சார சங்கிரகம் ஆகிய பலவும் அடங்கியது.

விலை இல்லை; தபாற் செலவு இல்லை. விலாசம் தெரிவித்தால் மறு தபாலில் அனுப்பி வைக்கிறோம்.

அமிர்தம் அண்டு கோ.,
தபாற் பெட்டி 222, மதராஸ்.

சற்குருவே துணை.

# ஸ்ரீ நமசிவாயகுரு தமிழ்சித்த ஆயுள் வேத வைத்தியசாலை, கோயமுத்தூர்.

இக் கோயமுத்தூரிலும் சென்னை முதலான விடங்களிலும் தீராதெனக் கைவிடப் பட்ட கொடிய வியாதிகளை வெகுசீக்கிரத்தில் சவுக்கியம் செய்து அநேக நற்சாக்ஷிப் பத்திரங்களும் பரிசுகளும் மெடல் சங்கிலி முதலியவை பெற்றவரும் ஸ்ரீ நமசிவாய குரு தமிழ் சித்த ஆயுள் வேத வைத்திய சாலை அதிபருமாகிய கோ. ந. முருகைய பண்டிதர் அவர்களால் தயார் செய்யப்பட்டு உலக பிரசித்தி அடைந்து வரும் ஔஷதங்கள்.

## மேக ராஜாங்க மதன விந்தாதி லேகியம்.

மேலேகண்ட மேகராஜாங்க மதன விந்தாதி லேகியத்தை காலை மாலை இரு வேளையாக ஒரு மண்டலம் சாப்பிட்டு வருவதினால், 20 வகை மேகத்தை போக்கி தேகத்தை பசும் பொன் போல் செய்வது மன்றி, சிலேற்பனம் 96ம் கிரந்தி, அரையாப்பு, சூலை, க்ஷயம், ஈளை இருமல், மந்தாரகாசம், காமாலை, சோகை, பாண்டு, குன்மம் 8-ம் சிரிச்சனங்கள் 6-ம் வாய்வு 26ம் பித்தம் 40-ம் இலிங்க புற்று, ஸ்திரிகளுக்கு யோனி புற்று, வெள்ளை, மஞ்சள் வெள்ளை, பிர மேகம் சொறி கரப்பான், மேக ஊறல், தண்டில் புண், கண்ட மாலை, மகோதிரம், நீராமை, கவுசி, உள மாந்தை, அஸ்திஜுரம் அஸ்திவெட்டை, உஷ்ண வாய்வு அரோசகம், அன்னத்துவேசம் வாந்தி, விக்கல், கால்கை எரிவு, பெரும்பாடு, எலும்பு புருக்கி நோய், மூல வாயுவு, மூலத்தில் ரத்தம்,



கிரு கிருப்பு மயக்கம், நித்திரை, ஸ்திரிகளுக்கு கெற்ப நோய் 7ம் ஸ்திரிகள் மலடியாயிருந்தால் கெர்ப்பம், நீரடைப்பு, சதையடைப்பு, துர்மாங்கிச அடைப்பு, சீதக்கடுப்பு, முதலான கொடிய ரோகங்களை சுகப்படுத்தி தேகம் சிவந்து மின்னும் இந்திரியம் இருகி கட்டும் இதை வயோதியர்கள் சாப்பிட்டு வருவார்களானால் ஜீவாதாரசரம்புகள் முருக்கேறி தாது விர்த்தியையும் ஆண்மையையும் உற்சாகத்தையும் தேகாரோக்கியத்தையும் ஆனந்த சுகத்தையும் கொடுப்பதில் இதற்கு நிகரான லேகியம் வேறேயில்லை யென்று உறுதியாய் கூறுகிறேன். ஆண் பெண் யாவர்களும் சாப்பிடலாம் ஒரு தரம் வாங்கி அநுபவிப்பீர்களானால் இதன் உண்மை நன்கு விளங்கும். பத்தியமில்லை.

48-நாள் சாப்பிடக்கூடிய லேகியம் சேர் 1-க்கு விலை 5-0-0
24-நாள் ,, சேர் ½-க்கு விலை 2-8-0
12-நாள் ,, சேர் ¼-க்கு விலை 1-4-0
வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

## குணத்திற் சிறந்தது! விலை குறைந்தது!! பரிமளமிகுந்தது!!!

## சர்வ மேகங்களுக்கும் மகா ராஜாங்க சுகந்த பரிமளாதி ஸ்நானத்தைலம்.

மேலே கண்ட சுகந்த பரிமளாதி ஸ்நானத் தைலத்தை ஆண் பெண் யாவரும் ஸ்நானம் செய்து வருவதாலும் நித்தியம் தலையில் தடவி தலைவாரி வருவதினாலும் தீரும் வியாதிகள், மேகம், நீரளிவு, நீர் எரிச்சல், கிரிச்சனம், க்ஷயரோகம், கண்ணெரிவு, கண் புகைச்சல், கைகாலெரிவு, பிரமேகம், ரொணம், கிரந்தி கற்றாளை சாத்தம், அஸ்திஜுரம், அஸ்தி வெட்டை, உள் வெட்டை, தாது நஷ்டம் பித்தத்தாலுண்டாகும் மயக்கம் புண் புரை முதலானவைகளும் குழந்தைகள் முதல் ஆண் பெண் யாவர்களும் தலைக்கு பத மிட்டு வாரி வந்தால், தலையில் மேகத்தினாலுண்டாகும் பொடு அதினால் சகிக்க முடியாத அரிப்புண்டாகி கோதுமை தவிடுபோல் உதிருகின்றதும் மாறிப்போகும். இந்த தைலமானது எங்கள் முன்னோர்களால் கையாண்டு வந்ததும் என் அநுபவத்துக்கு வந்து ஆயிரக்கணக்கான ரோகிகளுக்கு சகல வியாதிகளையும் சவுக்கியப்படுத்தி இருக்கிறேன். மேற்படி சுகந்த பரிமளாதி ஸ்நான தைலமானது யாதொரு நோய் வராமல் பாது காப்பதோடு ராஜ கருவியாகிய மூளைக்கு குளிர்ச்சியையும் கண்களுக்கு பூரண சந்திரன் போன்ற குளிர்ந்த பிரகாசத்தையும் திவ்விய தேஜஸ்ஸையும் ஞாபக சக்தியையும் உற்சாகத்தையும் தேகாரோக்கியத்தையும் கொடுக்குமென்பதில் சந்தேகமில்லை. பத்தியமில்லை.

☞ 24-அவுன்ஸ் கொண்ட சீசா 1-க்கு விலை 5—0—0 ☞ 12-அவுன்ஸ் கொண்ட சீசா 1-க்கு விலை 2—8—0
☞ 6-அவுன்ஸ் கொண்ட சீசா 1-க்கு விலை 1—4—0 வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

## வசந்த குஸுமாகர கஸ்தூரி வாய்வு குளிகை.

மேலேகண்ட கஸ்தூரி வாய்வு குளிகையானது தங்கம், வெள்ளி, முத்து, பவளம் தாம்பிரம் முதலாகியவைகளாலும் உயர்ந்த சரக்குகளாலும் பெரும்பாலும் சாஸ்திர ரீதியாய் மிக்க பிரையாசையுடன் யாவரும் எளிதிலடையும்படி சித்தம் செய்யப்பட்ட இந்த கஸ்தூரி வாய்வு குளிகையை உபயோகித்து வருவதினால் உஷ்ணத்தினாலுண்டாகும் வாய்வு, மாரடைப்பு, இடுப்புவலி, வயற்றுப்பிசம், நீர்கட்டு, பெண்களுக்கு கெர்ப்பபையிலுமுள்ள ரணம், அதனால் சீவுண்டாகி வயற்றில் குத்தல், வெள்ளை விழுதல், சகிக்க முடியாத வயற்றுவலி, இவ்வித வியாதிகளுக்கு இங்கிலீஷ் வைத்தியர்கள் வயிற்றை ஆப்பிரேஷன் செய்து பார்க்காமல் நிவர்த்தி செய்ய முடியாதென்று முடிவு சொன்ன வியாதிகளை அநேகர்களுக்கு எங்களுடைய வசந்த குஸுமாகர கஸ்தூரி வாய்வு குளிகையினால் நாலு ஐந்து வேளையில் பூரண சொஸ்தப்படுத்தி அதனால் பரிசுகளும் மெடல்களும் சங்கிலி முதலானதும் பெற்றிருக்கிறேன்.

மேல்கண்ட வசந்த குஸுமாகர கஸ்தூரி வாய்வு குளிகை அற்புத குண முடையன என்பதிற் சற்றும் சந்தேகமில்லை.

☞ 12-மாத்திரை கொண்ட சீசா 1-க்கு விலை 1—4—0 வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

உபயோகப்படுத்தும் விபரம் மருந்துடன் அனுப்பப்படும்.

☞ ஏஜண்டுகள் தேவை தகுந்த கமிஷன் கொடுக்கப்படும்.

மருந்து கிடைக்குமிடம்:—
பழனிவேல் பிள்ளை,
சோல் ஏஜண்டு, பெரிய கடை வீதி, கோயமுத்தூர்.


கோயமுத்தூர் ஸ்டார் பிரஸ் (லிமிடெட்) ஈரோடு பிராஞ்சு பிரசில் அச்சிட்டுப்பெற்று சா. இராமசாமி நாயக்கரால் வெளியிடப்பட்டது.